www.padippakam.com

# கவிதாசரண்

தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

ஆகஸ்ட், 1992, விலை ரூ.3.



படிப்பகம்

www.padippakam.com

# நாற்று

ஒற்றைத் தீபம் சூறைக் காற்றில் அணைந்து போகும். சுடலைத் தீயோ ஊழித் தீயாய்ப் பற்றிப் பரவும். இயக்கங்கள் சுடலைத் தீயாகப் பற்றும்போது, தர்க்க சிந்தனை ஒற்றைத் தீபமாய் விடைபெற்றுக் கொள்கிறது.

ஃ

எது இல்லாமல் உன்னால் ஒரு நிமிஷங்கூட உயிர் வாழ முடியாதோ, அது உன்னால் படைக்கப் பட்டதில்லை; அதற்காக நீ உழைத்ததும் இல்லை. அது இல்லாமல் உன் ஜனனமே இல்லை. உன்னுடையது என்று சொந்தம் கொண்டாடப் படுவது பசி மட்டுமே. அதைத் தணிப்பதொன்றே உன் வேலை என்றான பின், உன் படைப்பைப் பற்றிய ரகசியமே புதையுண்டு போய்விடுகிறது.

யோக்கியனாய் இருக்கும் வரை நிம்மதி. அயோக்கியனாய் அடையாளம் பெறுவது என்று தீர்மானித்து விட்டால், வெடிச் சிரிப்பையும் துடிச் செயலையுமே ஊடும் பாவுமாக்கி நெய்த முரட்டுப் போர்வையைப் போர்த்திக் கொண்டு பயம் உன் மனதில் வந்து உட்கார்ந்து கொள்கிறது. அது மரண பயம். மரணத்தில் மட்டுமே மடியும் பயம். போர்வையை உன்னால் விலக்க முடிந்தால், உன் மரணம் ஒரு விளைவாய் இல்லாமல் ஒரு நிகழ்வாய் நடந்து, உன் இருப்பை ஓர் உயிர்ப்பாய் எழுதி வைக்கும்.

ஃ

சூரியன் அஸ்தமிக்கிறது. அது ஒன்றும் சும்மா அஸ்தமிக்கவில்லை; உன்னை வெளிச்சப் படுத்திவிட்டுத் தான் அஸ்தமிக்கிறது. இன்னொரு உதயம் வரை உன்னை வெளிச்சமாய் வைத்துக் கொள்வதுதான் சூரியனுக்கு நீ செலுத்தும் மரியாதை.

படிப்பகம்

www.padippakam.com


# கவிதாசரண்

தமிழில்படைப்பிலக்கியமாதஇதழ்

ஆகஸ்ட், 1992

மாதத்தின் முதல் வாரத்தில் வெளி வருகிறது.

தனி இதழ் விலை ரூ. 3.
ஆண்டுச் சந்தா ரூ. 36.
சந்தாவை M.O. செய்க.

மனித நேயம் வளர்க்கும் இலக்கியத் தெளிவின் ஊற்றுக்கண்.

படைப்புகளை அனுப்ப மற்றும் தகவல் தொடர்புகளுக்கு:



ஆசிரியர், கவிதாசரண்,
31, டி.கே.எஸ். நகர்
சென்னை-600 019.



திறனாய்வுக்குப் புதிய நூல்கள் மட்டுமே ஏற்கப்படுகின்றன.

இதழை **580, T.H.Road,** சென்னை-**21**இலிருந்து வெளியிடுபவரும் ஆசிரியரும்: கவிதாசரண். ஆல்வெல்பிரஸ், **31, T.K.S.**நகர் சென்னை-**19**இல் அச்சிடுபவர்: திருமதி கவிதாசரண்.

படைப்பாளர்களே தங்கள் படைப்புகளுக்குப் பொறுப்பேற்கிறார்கள்.

வெளியிடுவதற்கு ஏற்கப்பட்டவற்றைத் திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை யுண்டு.

இதழ் பற்றிய உங்கள் மதிப்பீடுகளும் இதழுக்கான உங்கள் சந்தாவும் உங்கள் இலக்கிய வேட்கையின் வெளிப்பாடுகளாகட்டும். செயல்படுக.


“சோற்றுக் கவலையும் சொந்தக் கவலையுமே உன் சிந்தனையைத் தின்றுவிட்டால், நீ ஒரு பேசத் தெரிந்த விலங்கு என்பதற்கு மேல் வேறெந்த வகையில் உயர்த்தி? இந்த பிரபஞ்சத்தை விடவும் நீ பெரியவன் என்ற பிரக்ஞையைப் பெறாமலே முடிந்து போனால் நீ வளர்க்கும் நாயும் நீயும் ஒன்றுதான் என்றாகிவிடும். இப் பிரபஞ்சத்திற்கு நேற்று, இன்று, நாளை என்னும் இருப்பு நிலை மட்டுமே உண்டு. உனக்கோ, இந்த மூன்றோடுகூட காலங்கடந்த ஞான நிலையும் உண்டு. இந்த வெளிச்சத்தைப் பாராமலேயே, வெளிச்சத்தில் வெளிப்படும் விவரங்களே சதமென்று உறைந்து போய்விட்டால், நீயே வெளிச்சம் என்பதை மறந்து இருட்டில் ஒளிந்துகொண்டால், மனத்தை ஊடுருவாத மௌனமாகவே மடிந்து போவாய்.”

படிப்பகம்

www.padippakam.com

ஆசிரியர் பக்கம்

# ஊமை நாடகம்

மணலுக்குள்ளே ஊற்றுத்தண்ணீர்
தவமிருப்பதேன்?—நம்
மனதுக்குள்ளே ஆசைவந்து
விழித்திருப்பதேன்?

வடிவுக்குள்ளே ஆவிவந்து
குடிபுகுந்ததேன்—ஒரு
முடிவுக்குள்ளே தொடக்கம்வந்து
தடம் அமைப்பதேன்?

பூவுக்குள்ளே வாசம்வைத்த
பெருமகன் யாரோ?—இந்த
நாவுக்குள்ளே ஓசைவைத்த
நாயகன் தானோ?

பிஞ்சுக்குள்ளே கனிசமைக்கும்
திறமைகொண்டவன்—சிறு
நெஞ்சுக்குள்ளே நிறைவைவைக்க
மறந்துபோனதேன்?

வயிற்றுக்குத்தான் சோறுவைத்தான்
முடிவை ஏன் வைத்தான்?—சாண்
கயிற்றுக்குள்ளே கழுத்தைநீட்ட
மனிதன் ஏன் கற்றான்?

படைத்தவனே வடிவிழந்து
ஒளிந்து கொண்டதேன்?—மொழி
கொடுத்தவனே குரலிழந்து
ஊமையான தேன்?

படிப்பகம்

www.padippakam.com

என்னைத் தமிழ் அன்னை பெற்றாள்,
ஏடெடுத்து வாழ்ந்திருப்பேன்;
இன்னுயிரைத் தோற்ற பின்னே
என் குழியில் பூத்திருப்பேன்.

கவிதாசரண்
தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

மலர் ஒன்று ஆகஸ்ட், 1992 இதழ் பத்து

# தர்க்க ஞானம்

ஏற்றிய தீபத்தில் சுடர்மிக, சுடர்மிக,
என்உயிர் கண்வழி பாய்கிறது;
—மையிருளோ
என் முதுகைக் குறிபார்க்கிறது.

ஆற்றினில் பூம்புனல் பெருகிட, பெருகிட,
ஆனந்தமாய் நதிவளர்கிறது;
—ஆழ்கடலோ
அவசரமாய் அதை அழைக்கிறது.

காற்றினில் கீதங்கள் இழைந்திட, இழைந்திட,
கருத்தினில் பூமணம் கமழ்கிறது;—
அந்தோ அந்தக்
கானத்தில் சோகம்வந் தழுகிறது.

படிப்பகம்

www.padippakam.com

போற்றிடும் உள்ளொளி ஏற்றிட, ஏற்றிட,
புனிதத்தின் கோபுரம் வளர்கிறது;
—முன்னம்செய்த
பிழைகளைச் சுமந்துடல் வளைகிறது.

மேனியில் வாலிபம் பாய்ந்திட, பாய்ந்திட,
மோகம் ஆவேசமாய் மொய்க்கிறது;
—அதைத் தொடர்ந்தே
மூப்பெனும் கூற்றெதிர் பார்க்கிறது.

வேனிலில் தேன்மலர் பூத்திட, பூத்திட,
வீசுதென்றல் சுகம் விளைகிறது;
—கடுங்கோடை
வெய்யிலில் பொய்யுடல் வியர்க்கிறது .

தானெனும் ஆணவம் ஓங்கிட, ஓங்கிட,
தர்க்கத்தில் சொல்தவம் செய்கிறது;
—அதன் விடையோ
'தான்' அற்ற சூனியம் ஆகிறது.

மோனத்தில் வார்த்தைகள் மூழ்கிட,மூழ்கிட,
மூச்சினில் ஞானம் வந்தாள்கிறது;
—அங்கே கதை
'முற்றும்' என்றே தலைதாழ்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

விவாத சிந்தனை

# தமிழுண்ணிகள்

/கவிதாசரண்/

ஜூலை தொடர்ச்சி இது ஒரு தொடர்

நான் மேலும் தொடர்ந்தேன்.

''கல்வித்துறைக்கு திடீர் விழிப்பு வந்து, உங்கள் மறுபயிற்சிக்கு ஏற்பாடு செய்தாலும் நீங்கள் அதை எதிர்க்கவே செய்வீர்கள். காரணம் நீங்கள் பழமையிலிருந்து விடுபட மறுக்கிறவர்கள். தமிழில் உங்களுக்கு மறுபயிற்சியளிக்க எந்தக் கொம்பனுக்கும் தகுதியில்லை என்று நினைக்கிறவர்கள். மொழிக்கும் அறிவியல் பூர்வமான அணுகுமுறை உண்டு என்பதை யோசிக்கவே மறந்து போனவர்கள். ஆகவே உங்களை, உங்கள் மொழியறிவைச் சிறுமைப் படுத்திவிட்டதாக இயக்கம் நடத்துவீர்கள்.''

''அப்படித்தான் இருக்கட்டுமே. ஆனால் கல்வித்துறை நீங்கள் நினைப்பது போன்ற மறுபயிற்சிக்கு ஒருநாளும் திட்டடாது,'' என்று உறுதியாய்ச் சொன்னார் நண்பர்.

''எப்படி இத்தனை நிச்சயமாய் நம்புகிறீர்கள்?'' என்று கேட்டேன்.

நண்பர் சற்று நிதானித்தார். தம்முள்ளேயே ஒருமுறை பார்த்துக் கொள்வது போல சிறிது நேரம் மௌனம் காத்தார். பிறகு சொன்னார். ''பல்கிப் பெருகும் இந்த அறிவியல் யுகத்தில் காலம் காலமாக நாம் போற்றிக் காத்து வந்த அரிய மதிப்பீடுகள் எல்லாம், ஏதோ பேரத்திற்குரிய சாதாரண விஷயங்கள் போல் மதிப்பிழந்து வருகின்றன. அவற்றில் ஒன்று நம்மொழிப்பற்றாய் இருப்பதுதான் வெட்கக்கேடான விஷயம். இதற்கான அடிபடைக் காரணத்தை மொழியாசிரியர்கள் அறிய வேண்டும் என்பதைத்தான் நீங்கள், திரும்பத் திரும்பச் சொல்ல வருகிறீர்கள் என்பது எனக்கு விளங்காமல் இல்லை, நண்பரே. தன் மொழியை வளப்படுத்தத் தெரியாதவனின் தாய்மொழிப் பற்று ஓர் அர்த்தமற்ற சம்பிரதாயமாகவே மதிப்பிழக்கும் என்பதை நாங்களும் அறிகிறோம். எட்டுத் திக்குகளிலும் உள்ள கலைச்செல்வங்கள் யாவும் நம்மொழியில் சேர்க்கப்பட்டுருந்தால் எவனுக்கும் இந்த மொழியைப் புறக்கணிக்கத் துணிவு வருமா?

படிப்பகம்

www.padippakam.com

புறக்கணிக்கிறவன்கூட 'தமிழ் வாழ்க' என்னும் போர்வையிலேயே அதைச் செய்கிறான். நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதுதான் பரிதாபம். ஒரு மொழி கலைக் கருவூலமாய் இருக்க வேண்டியதுதான். ஆனால் அதைவிடவும் மொழிக்கு வேறு மேன்மையான நோக்கம் உண்டு என்பதை நம் அரசும் சரி, அதிமேதாவிகளும் சரி மறந்து போனார்கள், அல்லது புறக்கணிக்கிறார்கள் என்பதுதான் மிகப்பெரிய கொடுமை.

''இந்த யுகத்தில் காற்றில் மிதந்து வந்து காதில் விழுகின்ற ஓசைகள் எல்லாம் பேச்சுகளாக மொழியில் கொள்முதலாகின்றன. காரணம் வாழ்க்கை என்பது வயிற்றுப்பாடுதான் என்றாகிவிட்டதுதான். யுகப் பிரளயமாய்ப் பெருகும் அறிவியல் வெள்ளம் மனிதனைக் கூர்மைப் படுத்துகிறதே யொழிய அவனை மேன்மைப் படுத்துவதில்லை என்பதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

''ஒவ்வொரு மொழிக்கும் ஓர் அடிநாதம் உண்டு. அதுதான் மனிதனின் குணதோஷங்களை ஒரு பரந்த சமூகக் கட்டமைப்பில் நிர்ணயிக்கிற இழை. கலைச் செல்வம் என்பது கண்டுபிடிப்பாகவோ இறக்குமதியாகவோ ஒரு மொழியில் வந்து சேர்வது. இதன் தாக்கம் மொழியின் அடிநாதத்தைப் பாதித்துவிடாமல் பார்த்துக் கொள்கிற விஷயமாகத்தான் அடிப்படைக் கல்வி அமைந்திருக்க வேண்டும். 'வைத்ததொரு கல்வி மனப் பழக்கம்' என்று ஒரு தமிழ்க் கிழவி சொன்னாளே, அது இதைத்தான்.

இப்படி இருந்த கல்வி முறையை இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலேயன் 'எழுத்தர் உற்பத்திக் கல்விமுறை'யாக மாற்றினான். இன்றைக்கும் அதை அப்படியேதான் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம். மு. வ. விடம் நீங்கள் என்ன சொன்னீர்கள்? கணக்கெடுத்துப் படித்தால் உடனடியாக வேலையைத் தேடிக்கொள்ள முடியும் என்றுதானே. உங்கள் பிள்ளையையும் வேலை தேடிக் கொள்ளத்தான் படிக்க வைத்தீர்கள்.

''மாதச் சம்பளத்திற்கு ஒரு வேலை தேடிக் கொள்ளவே இந்திய மக்களில் 95 சதவீதம் பேர் தங்கள் குழந்தைகளைப் படிக்க வைக்கிறார்கள். வேலை கிடையாது என்றால் நம் பாமர மக்கள் இந்தக் கணமே தங்கள் குழந்தைகளை வீட்டோடு நிறுத்திக் கொண்டு எடுபிடிகளாக்கிவிடத் தயார்.

''இந்த மனோபாவம் இன்னும் எத்தனை தலைமுறைக்கு நீடிக்கும் என்று தெரியவில்லை. இது நீடிக்க வேண்டும் என்பது நம் அரசியல்வாதிகளின் எண்ணமாக இருக்க வேண்டும். காரணம் அவர்கள் ஒன்றும் சிந்தனாவாதிகள் அல்ல. வெள்ளைக்காரன் காலி செய்துவிட்டுப் போன இடத்தைப் பிடித்துக் கொண்டவர்கள். வெள்ளைக்காரனுக்காவது அவன் மொழி

படிப்பகம்

www.padippakam.com

மூலம் பெற்றிருந்த ஒரு பண்பாடு இருந்தது. 'எதற்கும் ஒரு முறையுண்டு' என்ற பண்பாடு. நமக்கு அதுவும் இல்லை. நமக்கு ஆங்கிலம் ஓர் இறக்குமதிச் சரக்கு. ஆங்கிலம் நமக்குப் பேசத் தெரிந்தாலும் தாய்ப் பாலோடு புகட்டப்படும் அதன் பண்பாடு நமக்குள் மூகிழ்க்க வாய்ப்பில்லை. நாம் நம் மொழியையும் இரண்டாம் பட்சமாக்கி விட்டோம். ஆகவே இதன் அடிநாதம் போதிக்கும் பண்பாடும் நமக்கு அன்னியமாகிவிட்டது.

''உண்மையில் நமக்கு நாமே முகமில்லாத மனிதர்களாக வல்லவா வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

''காவல்துறையைப் பாருங்கள். அது இன்னமும் அதிகார வர்க்கத்தின் எடுபிடி வேலைக்குத்தானே பயன்படுகிறது! அதைப் பொதுமக்களைக் காக்கும் துறையாக, திக்கற்ற மக்களின் நீதித் துறையாகச் செயல்பட மாற்றம் செய்திருக்கிறார்களா? ஒரு போலீஸ்காரனைக் கண்டால் 'சுறுக்' கென்று ஒரு தீச்சூட்டை சராசரி இந்தியன் ஒவ்வொருத்தனும் இன்னும் அனுபவித்துக் கொண்டுதானே இருக்கிறான்!

''இது நம் அரசியல்வாதிகளுக்கும் அதிகார வர்க்கத்திற்கும் தெரியாதா என்ன? தெரியும். அவர்கள்தான் கறுப்பு வெள் ளைக்காரர்களாகத் தங்களை நிலை நிறுத்திக் கொண்ட கொள் ளைக்காரர்களாக இருக்கிறார்களே.

''பொது மக்களுக்குக் கூடுதலாக ஒரு கஷ்டம் என்னவென் றால், இந்தக் கறுப்பர்கள் 'நம்மில் ஒருவனாக. நம்மோடு பிறந் தவனாக' இருப்பதால் அத்துமீறல்களும், அடாவடித்தனங்களும், ஊரையடித்து உலையில் போடுவதும், முழுப்பொய்களையே உண்மையாய்ப் பிரதிஷ்டை செய்வதும் அதிகரித்துப் போயின.

''ஆங்கிலேயன் இந்த நாட்டை ஆண்டதுகூடப் பெரி தில்லை. அதைவிடப் பெரிது 'ஆங்கில மேன்மையை' நம் இரத் தத்தில் ஊறவிட்டுப் போயிருக்கிறானே, அதுதான் அவன் சாதித்த மகத்தான காரியம் 'ஆங்கிலம் தெரிந்தவனே உயர்ந்தவன்' என்ற மனோபாவம் இந்தியர்களிடையே ஆழ மாய் வேரூன்றி இருக்கிறது.

''இந்த வேரூன்றல் இந்திக்காரர்களிடையே கொஞ்சம் கொஞ்சமாகக் களையப்பட்டு வருகிறது. காரணம் இந்தி இந் தியாவின் முதன்மை மொழியாக முன்னுரிமை பெற்றதால். நமக்கோ இந்தியும் ஒவ்வாத விஷயமாகிவிட்டது.

''இந்தியை ஏற்கமாட்டோம்' என்று சொன்ன இந்தத் தமிழ்க் கொம்பர்கள் என்ன செய்திருக்க வேண்டும். அதே மூச்சோடு, அசுர சாதனையாக, தமிழைத் தவிர்க்க முடியாத மொழியாக வளர்த்திருக்க வேண்டும். எல்லா கலைவளங்களும் செறிந்து 'முன்தோன்றி மூத்த குடியின்' உலகளாவிய மொழி யாக மாற்றம் செய்ய முயன்றிருக்க வேண்டும்.''

படிப்பகம்

www.padippakam.com

('மாணவர் மன்றம்' நிறுவி வளர்த்த தமிழ்ப் பெருந்தகை திரு மயிலை. சிவமுத்து அவர்கள், தாமே ஓர் இயக்கமாய், தமிழே தம் விளக்கமாய், குழந்தை நலக் கவிஞராய்ப் பயன் வாழ்வு வாழ்ந்தவர். இது அவர் நூற்றாண்டு விழாவுக்கான ஆண்டு. இங்கே அவர் புதல்வர் நினைவு கூர்கிறார்.)

# புகழ் வாழும் பல்லாண்டு

**மயிலை. முத்தெழிலன்**

இன்னல் புயல்தாம் தம்வாழ்வின்
இளமை தன்னில் வீசியது;
அன்புத் தந்தை இல்லாமல்
அலையுங் கொடிபோ லிருந்திட்ட
சின்னஞ் சிறிய வயதினிலே
சிந்தித் தச்சகப் பணியாற்றி
அன்னைத் தமிழைக் கற்றிட்டு
ஆசா னானவர் சிவமுத்து!

முயன்றே உயர்ந்தவர் சிவமுத்து;
முத்தமிழ் காக்க ராப்பகலாய்
அயர்வே இன்றி உழைத்திட்டார்;
அல்லல் பலவும் அடைந்திட்டார்!
தயவைப் பிறரிடம் நாடாமல்
தனித்தே அறப்போ ராற்றிட்டே
வியக்கச் செய்த உயர்வாளர்
விழுமிய புலவர் சிவமுத்து!



இலக்கிய ஆய்வில் திளைத்தாலும்
இனிய சிறுவர் நலனெண்ணி
பலப்பல நூல்கள் அளித்திட்டார்;
படித்தால் அனைத்தும் தேன்! தேனே!
தலம்பல போற்றும் சிவமுத்து
தரணியில் தோன்றி நூற்றாண்டு
நலமுற நிறையும் இவ்வாண்டு;
நற்புகழ் வளர்க பல்லாண்டு!

படிப்பகம்

www.padippakam.com

# துறவியின் மனிதப் போலிகள்

ஒருவனுக்குள் ஒன்றா?
ஒரு நூறு மனிதர்கள்!
எனக்குள் மட்டுமல்ல;
எல்லோருக்குள்ளும்தான்!
கபடம் போர்த்திய மனிதன்
ஆடை போர்த்திய மனிதனுக்குள்!
அடடா!... இந்தப்
புன்னகை விரிக்கும் திரைக்குப்
பின்னே ஒளிந்திருக்கும்
பொய்கள்தான் எத்தனை!
மொழிகள் கண்டுபிடிக்கப்பட்டதே
ஆன்மாவை மூடும் பொய்களுக்கு
ஆடை கட்டத்தானோ!
விழிகளில்தான் நிலா சிரிக்கும்;
உதடுகளில்தான் தென்றல் உலா வரும்;
மனசுக்குள்ளோ நச்சுக் கடலே
நாள்தோறும் அலையடிக்கும்!
தம்மை ஞான நூல்களாய்ப்
பிரகடனப்படுத்தும் இவர்கள்
பிரிக்கப்படும் போதுதான்
மஞ்சள் பத்திரிகை என்பது
மற்றவருக்குத் தெரிகிறது!
இவர்கள் லட்சியம் ஒரு தட்டுச் சோறே!
அதற்காக அடுத்தவன் வேட்டியையும்
அடகு வைக்கத் தயங்க மாட்டார்கள்.
இந்தக் கோரைப் புல்கள்
நெல் கதிர்கள் போல
என்ன நேர்த்தியாய் நடிக்கின்றன!
இவர்கள் சில்லறையாய்த் தம்மைச்
செலவழிப்பதும்கூட
மொத்தமாய் அபகரிக்கத்தான்.
சினேகிதம் மானிட உதடுகளில்
மனித நேய மந்திரம். இவர்களுக்கோ,
கடவுள் போல அதைக் காட்டி
தம்து உண்டியல் நிரப்பும் தந்திரம்!
சுயநலம் சுபிட்சமாய் வளர
இந்த மனிதப்போலிகளே சரியான எரு!

படிப்பகம்

www.padippakam.com

ஏமாறாதீர்கள்!
கோயில் அல்ல இவர்கள்;
கோயில் சுற்றில் கடன் கழிக்கக்
கட்டிவைத்த கழிப்பறைகள்!

பரிமாறுவது போல் பாவனை செய்து
நம் பாத்திரத்திலிருந்தே
அள்ளிக் கொள்ளும் அகப்பைகள்!

தம்மையே வினியோகம் செய்வதாய்
விளம்பரப்படுத்துவார்கள்.
முடிவில் இவர்கள் அபகரித்ததே
அதிகமாய் இருக்கும்.

இவர்கள், மானுடக் கொடியில்
விழிகளைக் கவரும் விஷப் பூக்கள்!
இந்தக் கண்ணாடிச் சூரியன்களின்
கதிர்வீச்சில், புத்தி பேதலிக்கும்
பூக்களும் உண்டு.
அடுத்தவர் வியர்வையைப் பருகியே
இந்த நீரோடைகள் தாகம் தணிக்கும்!
புன்னகையும் பேச்சும்தான்
இவர்கள் போர் புரியும் ஆயுதங்கள்!



ஒரு துறவியைப்போலத்
தத்துவங்கள் போதித்து,
ஒரு ஞானவான்போல
உபதேசங்கள் மொழிந்து,
ஒரு நண்பனைப்போல
நேசங்கள் பரிமாறி,
ஆன்மாவுக்குள்ளே ஓர்
அயோக்கியனாய் இருக்க
இவர்களால் எப்படி முடிகிறது!

ஓர் அப்பாவி கிடைத்தால் போதும்,
தமது எச்சிலையும் பன்னீரென விற்றுப்
பணம் சம்பாதிப்பார்கள்!

நட்பு நமக்கு இமைகள்;
இவர்களுக்கோ,
மென்று பசியாறும் பற்கள்!

www.padippakam.com

# எங்களுடைய தெய்வங்கள்

மூலம்:
கேரளக் கவிஞர்
**சச்சிதானந்தன்**

தமிழில்:
வானம்பாடிக் கவிஞர்
**புவியரசு**

நீண்ட நெடுங் காலத்திற்கு முன் எங்கள் தெய்வங்கள்
மண்ணாலும், கல்லாலும், மரத்தாலும்
படைக்கப்பட்டன. அவை,
எலி, புலி, கிளி முதுகுகளின் மேல் ஏறி,
மலைகளிலும் சோலைகளிலும் மேய்ந்து நடந்து,
மிருகங்களும் மனிதருமாய்க் கூடிப் புணர்ந்து,
விசித்திரமான சந்ததிகளைப் பெற்றெடுத்தன.

அப்புறம், அவை மலை, பள்ளத்தாக்குகள் தாண்டி,
சம நிலங்களுக்கு இறங்கி வந்தன.
ஓடும், வெள்ளியும் கொண்டு சமைக்கப்பட்ட
வெளுத்த தெய்வங்கள்
வயல்களுக்கும், சுரங்கங்களுக்கும்
அந்தப்புரங்களுக்கும் காவல் நின்றன.
மேல்மாடங்களிலும் நிலவறைகளிலும்
பெற்றுப் பெருகின.
அந்தக் கொலைபாதகத் தெய்வங்கள்
அப்புறம் வரங்கள் தரவும் ஆரம்பித்தன.

ஒரு கருத்த சாமியின் உடலில் தங்கம் பூசி,
அதன் வாயில் ஞானயோகத்தையும்
கர்மயோகத்தையும் திணித்து,
புல்லாங் குழலேந்திப் பசுக்களையும்
அர்ச்சுனர்களையும், பெண்களையும் மயக்க
அனுப்பி வைக்கப்பட்டது.

இயற்கையான கிராமத்துத் தெய்வங்களின்
சக்திகள் படுத்துவிட்டபோது,
புதிய தெய்வங்களைக் கப்பல் வழி
இறக்குமதி செய்யத் தொடங்கினார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

நம் நாட்டு அரசர்கள் அவற்றை
வரவேற்றுக் குடியிருத்தினார்கள்.

மிருகங்களுக்கு சுதந்திரம் தந்துவிட்டு
மனிதரை வாகனமாக்கினார்கள்.
மனிதரின் குனிந்த முதுகுகளின் மேல்
ஏலமும் பருத்தியும் ஏற்றிக்கொண்டு போனார்கள்.
வறண்ட கண்களில் பொன்னும், பணமும்,
நிலக்கரியும் தோண்டி எடுத்தார்கள். நம்
குனிந்த தலைகளின்மேல் புகைவண்டி ஓட்டினார்கள்.

அப்போதுதான்—
லாபம் குறைந்துவிட்ட நம் நாட்டுப் பிரபுக்கள்
தங்களில் ஒருவனுக்குக் கோவணம் கட்டி,
கீதையைக் கையில் திணித்துத் தெய்வமாக்கி
வட்ட மேசைகளுக்கு இந்தப் பக்கம்
பிரதிஷ்டை செய்தார்கள்.
எங்கள் சுவர்களை இன்னமும் அலங்கரிக்கிற
இந்தத் தெய்வம் நால்வர்ண பேதத்தை
நன்றாகவே நிலைநிறுத்தியது.

உயர்ந்த மதில்கள் தாண்டி,
தப்பி வந்து மகிழ்ந்த உழவரை
அடித்து அடக்கி,
அவதார தர்மம் நிறைவேற்றிய பின்,
அதன் சொந்தப் பகைவனாலேயே
எய்து வீழ்த்தப்பட்டு சுவர்க்கம் போய்ச் சேர்ந்தது.

இதனுடைய மேலாடை வந்து விழுந்தது
குழந்தைகளோடு சேர்ந்து நடனமிடும்
ஓர் அழகான தெய்வத்தின் மேல்.
நடனம் உச்சக் கட்டத்தை அடைகையில்,

அவர்
கூட்டத்திலுள்ள கருத்த குழந்தையின்
தலையை மெல்லக் கிள்ளி எடுத்து,
ரத்தம் ஒழுகத் தன் பொத்தான் துளையில்
செருகிக் கொள்வார்.

படிப்பகம்

www.padippakam.com

இந்தத் தெய்வத்திற்கும் ஒரு மானிடப் பெண்ணிற்கும்
பிறந்தவள்தான் எங்கள் மகா துர்க்கை.
இவளுக்கு ஒழுங்காகப் பலி நடத்துவதில்
பூதகணங்கள் கவனமாகச் செயல்பட்டன.

இப்போது எங்களுடைய தெய்வ பரம்பரை
மிகப் பிரபலமாகிவிட்டது.
உலகின் எல்லா சாம்ராஜ்யங்களிலிருந்தும்
தேவ தூதர்கள் தங்கச் சிறகுகள் வீசி
இங்கே வந்து சேர்கிறார்கள்.
தாகத்தால் தவிக்கும் உதடுகளை
டாலரும் மார்க்கும் ரூபிளும் பிராங்குகளும்
தொட்டு முத்தமிட வைத்துவிட்டு,
குடியிருப்புகளையும் வயல்களையும்
எழுதி வாங்கிக்கொள்கிறார்கள்.

எங்கள் பலதரப்பட்ட தெய்வங்களும் நிலவறை நிறைய.
அவற்றின் தாகம் தீர்ப்பவை, அடிமைகள் மற்றும்
ஆதிவாசிகளின் எலும்புக்கூடுகள்.
சில சமயம் அவை மாமிசம் புசிக்கும்.
பசி வெறி கொண்டு பற்களைக் கடித்து
அட்டகாசம் புரிகின்றன.

சில சமயம் தரித்திரப் பிரதேசங்களில்
எமது தெய்வங்களுக்குப் பிரத்யேகப் படையல்கள்
அர்ப்பணிக்கப்படுகின்றன.
'அக்னிஹோத்ரம்' நடத்தி
நாடும் நகரமும் சுத்தப்படுத்தப்படுகின்றன.

'அஷ்டமங்கலம்' அர்ப்பணிக்கப்பட்டு,
கொடியேற்றம் செய்யப்பட்டு,
ஆயிரம் கலசங்கள் வைத்து,
கோடியர்ச்சனைகள் நடத்தி,
ஜன்கணமனவும் வந்தேமாதரமும்
பஜனை பாடிக் குதித்து,
நாத்திகரின் மண்டையோடுகளைக்
கழுத்திலணிந்து நடனமாடுகின்றன...

படிப்பகம்

www.padippakam.com

# கதவைத் திற, அம்மா!

## மூத்து நிலவு



இரவின் மையிருட்டில் 'சோ'வென்று பெய்யும் மழை திசை தெரியாமல் தடுமாறும் ஊமை அரக்கனைப் போலப் பிதற்றிக் கொண்டிருந்தது.

அந்தக் குடிசையில் கொழுந்தம்மை தன் முந்தானையை விரித்துப் போட்டுப் படுத்திருந்தாள். நித்திரையின் றினைவலைகளில் மிதந்து கொண்டிருந்த அவளின் முகத்தில் 'சொட்'டென்று விழுந்தது ஒரு மழைத்துளி. கொழுந்தம்மை எழுந்து விளக்கைப் பொருத்தினாள். அருகில் இருந்த கும்பாவை எடுத்து ஒழுகும் இடத்தில் வைத்தாள். நைந்துபோன கூரையின் வலுவையெல்லாம் பிழிந்து கொண்டு சொட்டுச் சொட்டாக ஒழுகியது மழை நீர். கொழுந்தம்மை அதையேபார்த்தாள். சற்று முன் கலைந்து போன நினைவுகள் மீண்டும் அவள் நெஞ்சில் அலை அலையாய் எழுந்தன. அவளின் நைந்துபோன நெஞ்சின் வலுவையெல்லாம் பிழிந்து விடுவதலைப் போல அவளிரு கண்களிலிருந்தும் சொட்டுச் சொட்டாய்க் கண்ணீர் வடிந்தது.

கொழுந்தம்மைக்கு இப்போது ஐம்பது வயது முடிந்து விட்டது. அளவுக்கு மீறிய உழைப்பால் அவளுடைய உடல் பிழிந்தெறிந்த கருப்பஞ் சக்கை போல் ஆகிவிட்டது. ஆனால், இளமைப் பருவத்தில் அவள்தான் எத்தனை அழகாக இருந்தாள்!

கொழுந்தம்மைக்குப் பத்தாவது வயதிலேயே கல்யாணம் நடந்துவிட்டது. ஐந்து வயதிலேயே அனாதையாகி விட்ட அவளுடைய அத்தை மகன்தான் அவள் கைப்பிடித்த கணவன். அவன் ஒரு நெசவாளி. இதோ, இந்தக் குடிசையில்தான் அவன் தறி போட்டிருந்தான். நெசவுத் தொழிலின் நுணுக்கங்களையெல்லாம் கல்யாணம் முடிந்து வந்த ஓரிரு மாதங்களிலேயே கருத்தாய்க் கற்றுக்கொண்டாள் கொழுந்தம்மை. அவள்தான் தன் அத்தானுக்கு எத்தனை பேருதவியாய் இருந்தாள்! அவள் பாவு தோய்வதும், ஊடிழைப்பதும், தெறித்துப்போகும் இழைகளைப் பொருத்திக் கொடுப்பதும், துவண்டு போகும் தன் கணவனை அணைத்துக் குழைவதும்... அப்பப்பா! கண்டால் கண்ணேறு படக்கூடிய காரியங்களையெல்லாம் சிட்டாய்ப் பறந்து செய்து முடிப்பாள்.

படிப்பகம்

www.padippakam.com



பெரும்பாலான மனிதர்களின் மதச் சண்டை என்பது, இரு மனிதர்கள் தங்கள் புறக்கணிப்புக்காளான பெண்ணுக்காகச் சண்டை போட்டுக் கொள்வது போலத்தான்.

— லார்ட் ஹாலி:பேக்ஸ்

ஆனால், வெள்ளிக் கிழமை தோறும் தன் அத்தானுக்குத் திருஷ்டி சுற்றிப்போட மட்டும் தவறமாட்டாள்.

அதெல்லாம் பதினைந் தாண்டுகளுக்கு முன்பு. இப்பொழுது எல்லாம் முடிந்து விட்டது. அவளின் நெஞ்சின் பசிய நினைவுகளை யெல்லாம் பாழாக்கிவிட்டு அவளுடைய கணவன் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே மண்ணில் மறைந்துவிட்டான். அதுதான் அப்படி முடிந்ததென்றால் அவளின் பயனுடைய வாழ்க்கை? அதையும் பதினைந்து நாட்களுக்கு முன் பறிகொடுத்து விட்டாளே! பறித்தெடுத்துக் கொண்டானே அவன்!

"டட்...டட்..."

தீயைத்தொட்டு விட்டதைப் போலத் திடுக்கிட்டது அவள் நெஞ்சம். யார் கதவைத் தட்டுவது? கொட்டும் மழையில் யார் அவள் வீட்டைத் தேதடி வந்துள்ளது?

"டட்...டட்..."

மீண்டும் அந்த ஓசை. மீண்டும் மீண்டும் யார் இப்படிக் கதவை இடிப்பது?

"அம்மா..."

அம்மா? ஓ தெய்வமே! அவன் வந்துவிட்டான்! வருவான் என நினைத்தாள். வந்து விட்டான் அவன். ஏனோ கொழுந்துவிட்டெரியும் தீச் சுடலை கோடை மழையில் அணைவதைப்போல அவளின் பொங்கி நின்ற உணர்ச்சிகள் யாவும் பொசுக்கென்று அடங்கின.

"கதவத் திறம்மா. மழையில நனைஞ்சிட்டேன். ரொம்பக் குளிருதும்மா."

கொழுந்தம்மை அடித்து வைத்த சிலையாய் அமர்ந்திருந்தாள். அவனை அவள் எதிர் பார்த்தாள். ஆனால் வீட்டைத் திறந்து வைத்து, அவனை அழைத்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கவில்லையே? 'கதவைத் திறம்மா,' என்கிறான். ஏன் திறக்கவேண்டும்?

"திறக்க மாட்டியாம்மா? உங்கிட்ட நான் மன்னிப்புக் கேட்கத்தான் வந்திருக்கேன். என்னைப் பாக்க மாட்டியா? பாத்துப் பேச மாட்டியா?... அம்மா... அம்மா..."

கொழுந்தம்மை தன் தளும்பும் கண்களை மூடிக் கொண்டாள். கட்டுமீறித் தேம்பும் உதடுகளைக் கடித்துக் கொண்டாள்.

"அம்மா, உன்னைக் கடைசியாப் பாத்துப் போக வந்தேன். என்னைப் பாக்க

படிப்பகம்

www.padippakam.com

உனக்கு விருப்பமில்லேன்னா, நான் என்ன செய்ய முடியும்? திரும்பிப் போக வேண்டியது தான். ஆனா, ஒன்னு மட்டும் உண்மைம்மா. நீ யாரையோ திருப்பி அனுப்பலே. உன்னோட சொந்த மகனைத் திருப்பி யனுப்புறே. உனக்கே நல்லாயிருந்தா சரி. வர்றேன்.''

திருப்பி நடக்கும் காலடிச் சத்தம் மழை யோசையில் மெல்லத் தேய்ந்து மறைந்தது. அதுவரை சிலைபோல ஆமர்ந்திருந்தவள் திடீரென்று ஆவேசம் கொண்டவளைப் போல் எழுந்தோடி வந்து கதவைத் திறந்தாள். வெட்டி நிற்கும் மின்னலில் அவள் கண்கள் எட்டிய மட்டும் துழாவின. ஆனால் அவன் போய்விட்டான். மன்னிப்புக் கேட்டு மழையோடு மழையாக வந்த மகனைக் கண்ணை மூடிக் கொண்டு திருப்பி அனுப்பி விட்டாள். ஐயோ! பெற்றிருந்தால் அல்லவா அவளுக்குப் பிள்ளை அருமை தெரியும்? கதவை ஓங்கி அறைந்து விட்டு முன்பு தான் உட்கார்ந்திருந்த இடத்திலேயே ஓடிச் சென்று விழுந்தாள். நெஞ்சங் கொள்ளாது பொங்கும் துயரத்தில் முகத்தை மூடிக்கொண்டு அழலானாள்.

அவள் ஒரு பெற்றறியாப் பேதை. மணமாகிப் பல ஆண்டுகளான பின்னும் தன் மணி வயிறு விளங்காத மலடியாகவே இருந்துவிட்டாள். அதைப் பற்றி அவளுடைய கணவன் கவலைப்பட வில்லை. ஆனால், கொழுந்தம்மையால் அப்படி இருக்க முடியவில்லை. தன் கணவனுக்குப் பின் அவன் வாழ்ந்த வீட்டில் அணையா விளக்கெரிய வேண்டும் என ஆசைப்பட்டாள். அதற்காகத் தன் கணவனை இன்னொரு கல்யாணம் செய்து கொள்ளும் படி நச்சரிக்கத் தொடங்கினாள். ஆரம்பத்தில் அவளுடைய கணவன் அவள் வேண்டுகோளை விளையாட்டென்று எண்ணினான். பின்னர் வெகுண்டு நிராகரித்தான். ''பொற்சிலையாய் நீ இருக்கும் போது வேறொரு பெண்ணை நான் தீண்டமாட்டேன்,'' என்றான். ''பொற்சிலை பிள்ளை பெறாது, அத்தான். அதுக்கொரு பெண்தான் வரணும்,'' என்று பிடிவாதம் பிடித்தாள். முடிவில் அவள் பிடிவாதமே வென்றது.



திடீரென்று ஒரு நாள் அவள் கணவன் அவளின் முன் வந்து, ''பெண் பார்த்துட்டேன், கொழுந்து,'' என்று கூறினான். ''அப்படியா!'' என்று கேட்டுச் சிரித்தாள். ஆனால் அவள் இதயம் புகையைக்கூட எச்சரிக்கைப் பாணமாக அனுப்பாத எரிமலையைப் போலப் பொங்கி வழிந்

படிப்பகம்

www.padippakam.com



நல்ல மதம் என்பதற்கான சோதனை, நீ அதைப்பற்றி நகையாட முடிகிறதா என்பது தான்.

ஜி.கே.செஸ்டர்டன்

து. என்? அவள் ஒரு பேதை. வெகு சிரமப்பட்டுத் தன்னை இயல்பாக வைத்துக் கொள்ள முயன்றவளைப்பிடித்து நிறுத்தி அவள் கண்களை ஊடுருவினான் அவள் கணவன். அதற்கு மேலும் தன்னைக் கட்டுப்படுத்த முடியாதவளாய் முகம்திருப்பித் தேம்பினாள். அவள் கணவன் ஆதரவாக அவள் முகத்தை ஏந்திக்கொண்டவனாய்,

''இப்பக்கூட ஒன்னும் மிஞ்சிப் போயிடல, கொழுந்து. நாளைக்கே போய் பெண் வேண்டாம்னு சொல்லிட்டு வந்திடறேன்,'' என்றான்.

கொழுந்தம்மை அவனைச் சுற்றிக் கொண்டாள்.

''கூடாது, அத்தான். நீங்க அவளைக் கட்டிக்கத்தான் வேணும்.''

''பின்னே ஏன் நீ அழறே?''

''ஏன்னு தெரியிலியே. ஆனா, இந்த அழுகைக்கு ஒரு அர்த்தமும் கிடையாது, அத்தான்.''

''கொழுந்து, தியாக உணர்ச்சிங்கிறது வாழ்க்கையில ஒரு கணப் பொழுதுதான் நேரும். அந்தக் கணப்பொழுதையே வாழ்க்கைன்னு நினைச்சுக்கலாமா?''

''அதெல்லாம் ஒன்னுமில்லே. தியாகத்தைப் பத்திப் பேச நான் கொஞ்சமும் அருகதையில்லாதவ. தன்னலத்தாலதான் உங்களைக் கல்யாணம் செய்துக்கச் சொல்றேன். மனைவியா வாழ்ந்துட்டேன், அத்தான். இப்போ நான் தாயா வாழ ஆசைப்படறேன். உங்க குழந்தையைத் தாலாட்டி வளர்க்க ஆசைப்படறேன்.''

''சரி, சரி. உன் ஆசைப்படியே ஆகட்டும். எழுந்து சாப்பிட வா.''

''இருங்க பெண்ணைப் பத்தி ஒன்னும் சொல்லலியே?''

''ஓகோ! சொல்லலியா? ஆமாம். சொல்ல வேண்டியதுதான். பெண் ஒரு ஊமை. துப்பில்லாத சோத்துப் பிண்டம்.''

''அத்தான்!'' என்றலறினாள் கொழுந்து.

''பேசாதே, கொழுந்து. கல்யாணம் செய்து கொள்ளும்படி பிடிவாதம் பிடிச்சே. நானும் செய்துகொள்ளத் துணிஞ்சிட்டேன். இந்த முடிவுல மாற்றம் இருக்கக் கூடாது. குத்துவிளக்கைப் போல நீ இருக்கும் போது இந்த வீட்டுக்கு ஒரு கொல்லைக் காட்டுப் பொம்மைதான் வரமுடியும். அப்படிப் பட்டவ கிட்டதான் நீ என்னை அமைதியா அனுப்பி வைப்பே. எல்லாம் எனக்குத் தெரியும். வா.''

படிப்பகம்

www.padippakam.com

அதே மாதத்தில் கொழுந்தம்மையின் கணவனுக்குத் திருமணம் நடந்தது. அவன் சொன்னது போல் பெண் ஓர் ஊமைதான். ஊமை மட்டுந்தானா? உன்மத்தம் பிடித்த அந்தச் சதைப் பிண்டத்தை மனைவி என்று வரித்துக் கொண்டானே அவள் கணவன்! கொழுந்தம்மையிடத்தில் அவனுக்குள்ள அன்பை வேறெப்படித்தான் அவன் காட்டியிருக்க முடியும்?

வந்தவள் ஓர் ஊமைதான். நல்லுணர்ச்சி உள்ளவர்கள் பார்க்கக் கூசும் சதைப் பிண்டமும்தான். இளமையின் மதர்ப்பைத் தவிர அவளிடத்தில் வேறேதும் இல்லை.

எப்படியானால் என்ன? அவளும் ஒரு மலடியல்ல. ஆண் ஒன்றும் பெண் ஒன்றுமாய் அடுத்தடுத்துப் பெற்றுவிட்டாள். கொழுந்தம்மையின் கனவு நிறைவேறி விட்டது. இரண்டு குழந்தைகளும் வித்தாரம் பேசி மயக்கும் சித்திரப் பொற்சிலைகளாய்த் திகழ்ந்தன. இதைவிட வேறென்ன வேண்டும்! பெற்றவளை விடப் பெருமகிழ்ச்சி கொண்டவள் இந்தப் பேதை கொழுந்தம்மைதான். மாதவம் செய்து பெற்ற மழலைச் செல்வங்களுக்கு 'மாதவன்' என்றும் 'மாதவி' என்றும் பெயர் சூட்டி மகிழ்வெறி கொண்டு வளர்த்தாள்.

மாதவி பிறந்த மூன்றாம் ஆண்டில் கொழுந்தம்மை கணவன் மாரடைப்பில் இறந்தான். மனைவி என்ற நிலையை இழந்த அவள் அதன் பிறகு முழுக்க முழுக்க ஒரு தாயாக நின்றாள். இப்பொழுதெல்லாம் அவளுக்குக் குழந்தைகளைப் பராமரிக்கவே நேரம் போதவில்லை. அத்துடன் பெற்றுக் கொடுத்த ஊமைச்சிக்குக் கற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பும் அவளுக்கு ஏற்பட்டது. விலங்காக வளர்ந்திருந்தவளைப் பெண்ணாக மாற்ற வெகுவாக முயன்றாள் அவள்.



குழந்தைகள் இரண்டும் கொழுந்தம்மையிடத்தில் உயிராய் வளர்ந்தன. மாதவி ஆரம்பம் முதல் ஊமைச்சியை வெறுத்தாள். ஆனால், மாதவன் அப்படியில்லை. கொழுந்தம்மையிடத்தில் எல்லையற்ற அன்பு கொண்டிருப்பினும் அந்த ஊமைச்சியிடமும் பரிவு காட்டினான்.

பெரியவளாகி விட்ட மாதவிக்குச் சென்ற ஆண்டு திருமணம் நடந்தது. பிறந்தகம் விட்டுப் போகும் மாதவி கொழுந்தம்மை, மாதவன் இவர்கள் இருவரை மட்டுமே விழுந்து வணங்கிப் புறப்பட்டாள். மாதவன் தன் தங்கையிடம், ''சின்னம்மாவையும் வணங்கு,'' என்றான். மாதவி சட்டென்று, ''எனக்கு என்

படிப்பகம்

www.padippakam.com

புரட்சிக் கோஷங்கள் மட்டுமே மக்களுக்குத் தின்னக் கொடுத்தால், அவர்கள் இன்றைக்கு கேட்பார்கள்; நாளைக்குக் கேட்பார்கள்; நாளை மறு நாள்கூடக் கேட்பார்கள். ஆனால் நான்காம் நாள் நம்மை நரகத்தில் அழுத்திவிடுவார்கள். —குருஷ்சாவ்

அம்மாவின் ஆசீர்வாதமே போதுமண்ணா. நாளைக்கு நீ கல்யாணம் செய்து கொண்டு உன் அம்மாவின் ஆசீர்வாதத்தை மறக்காமல் வாங்கிக் கொள். எனக்கு வேண்டாம்,'' என்றாள்.

''மாதவி! போய் அவளை வணங்கி வா,'' என்று கர்ஜித்தாள் கொழுந்தம்மை. மாதவி மருண்டாள்.

''அம்மா!''

''பேசாதே. போய் அவளை வணங்கி வா. இல்லேன்னா என் முகத்தில விழிக்காதே.''

மாதவி மௌனமாய்ச் சென்று ஊமைச்சியை வணங்கிவிட்டுக் கொழுந்தம்மையின் முன் வந்து நின்றாள்.

''போதுமா, அம்மா?''

கொழுந்தம்மை தன் மகளை அணைத்துக் கொண்டு கண்களில் நீர் மல்க,'' இப்போ உன்னை வாழ்த்தி வழியனுப்ப உன் அப்பா இல்லியேடி, கண்ணே,'' என்றாள்.

அதுவரை அனைத்தையும் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்த மாதவன், ''நல்லா இருக்கும்மா, நாடகம்,'' என்றான். கொழுந்தம்மை அவனை துயரத்தோடு பார்த்தாள்.

''நாடகந்தான்டா, மாது. அது உனக்கு விளங்க வேண்டாம். ஆனா, நீ மட்டும் என்னை விட்டு விலகிடாதே. அதை என்னால தாங்கிக் கொள்ள முடியாது. என் வாழ்க்கையில யார்கிட்டேயும் பிச்சை கேட்டதில்லே. இன்னிக்கு உன்கிட்ட, என்னோட சொந்த மகன்கிட்ட கேக்க வேண்டியதாச்சு. நான் உன்னோட தாய்ங்கிறதை மட்டும் மறந்துடாதே.''

ஆனால், அன்று தாய்க்கும் மகனுக்கும் இடையே விழுந்த கீறல் பதினைந்து நாட்களுக்கு முன் விரிசல் கண்டுவிட்டது.

அன்று காலை கொழுந்தம்மைக்கும் ஊமைச்சிக்கும் வாய்ச்சண்டை. அந்த நேரத்தில் அங்கே வந்த மாதவன், ''ஏன் எந்த நேரமும் இப்படி வம்படிக்கிறீங்க?'' என்றான்.

''உனக்கு வேணாம் போ. நீ இதில தலையிடாதே,'' என்றாள் கொழுந்தம்மை. அப்பொழுது ஊமைச்சி ஏதோ உளறவும் கொழுந்தம்மை வெகுண்டவளாய், ''என்ன சொன்னே? பாதகி. போ. செத்துப் போ. செத்துத் தொலைஞ்சு போ,'' என்று சொல்லி அவள் கன்னங்களில் மாறி மாறி அறைந்து விட்டாள். மாதவன் சட்டென்று

படிப்பகம்

www.padippakam.com

முன் வந்து விலக்கி, ''சீ . ச்சீ... நீ ஒரு மிருகம். இன்னொரு தடவை என் தாய் மேல கை வைக்காதே. அவள் என் தாய். உன்னையும் தாய்ன்னுதான் நினைச்சிருந்தேன். ஆனா, நீ ஒரு பேய்ன்னு காட்டிட்டே,'' என்றான்.

''மாது!''

''போதும். இனி இந்த வீட்டில ஒரு நிமிஷங்கூட இருக்க முடியாது. வா நாம் போகலாம்,'' என்று சொல்லி ஊமைச்சியை அழைத்துக் கொண்டு வெளியேறப்போனான். அவனைத் தடுத்து, ''ஏன்டா கோழை மாதிரி நீ வெளியே போறே? வெளியேற வேண்டியவ நான். நீங்க இந்த வீட்டுலேயே இருந்துக்கங்க,'' என்று சொல்லிவிட்டு அன்று இங்கு வந்தவள்தான்.

மழை இன்னும் பெய்து கொண்டுதானிருந்தது. ஆனாலும் வேகம் தணிந்திருந்தது.

''அம்மா.''

கொழுந்தம்மை சட்டென தலைநிமிர்ந்தாள். அவன் மீண்டும் வந்துவிட்டான்! அவன்!... மாதவன்! இந்தத் தடவை அவனைத் திருப்பி அனுப்பிவிட்டால் அவள் இருதயமே வெடித்துவிடும். அவசரமாய் எழுந்து சென்று கதவைத் திறந்தாள்.

''அம்மா!'' என்று ஆவலோடு அழைத்தவன், கொழுந்தம்மையின் சலனமற்ற முகத்தைப் பார்த்ததும் தலையைத் தாழ்த்திக்கொண்டான். தெப்பமாய் நனைந்து நின்ற அவனுடைய உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. ''பசிக்குதும்மா,'' என்றான் ஐயா! பசியென்றா வந்துள்ளான் அவள் வளர்த்த மகன்!

''வா, உள்ளே. வந்து துணி மாத்திக்கோ.''

''ஆனா அம்மா என்னை மன்னிச்சிட்டியா?''

''வா உள்ளே.''

அவன் வந்தான். கொழுந்தம்மை ஒரு மரப்பெட்டியைத் திறந்து தன் கணவனின் கல்யாண வேட்டியை எடுத்துத் தன் கண்களில் ஒற்றிக்கொண்டு மாதவனிடம் கொடுத்தாள். மாதவன் உடை மாற்றிக் கொண்டான். அவனுக்குச் சோறு போடுவதற்காக ஒழுகும் இடத்தில் வைத்திருந்த கும்பாவை எடுக்கப் போனவள் ''ஆ!''என்று அலறிவிட்டாள். ''என்னம்மா?'' என்று கேட்டுத் திடுக்கிட்டான் மாதவன். ''ஒன்னுமில்ல,'' என்று சொல்லித் தன்னைச் சமாளித்துக்கொண்டாள். கும்பாவில் வடிந்திருந்த கூரை நீர் மாசடைந்த இரத்தம் போல் தோற்றஞ் செய்து அவளை அதிர வைத்து விட்டது. ஏன் இந்தக் கெட்ட குறி?

கும்பாவை எடுத்துக் கூரை நீரைக் கொட்டிவிட்டுக் கழுவினாள். நீர் விட்ட சோற்றைப் பிழிந்து போட்டு, அடுப்பில் வைத்திருந்த குழம்பை ஊற்றி எடுத்து வைத்தாள். மாதவன் சாப்பிட்டான். புது மாப்பிள்ளையைப் போல் தலை நிமிராமல் உண்ணும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் சாப்பிட முடியாமல்

படிப்பகம்

www.padippakam.com

சாப்பிட்டான். அவன் கை நடுங்கிக் கொண்டிருந்தது.

மாதவன் பாதி சோற்றோடு எழுந்து விட்டான். கொழுந்தம்மை மீதிச் சோற்றைச் சாப்பிட்டுவிட்டுக் கும்பாவை அலம்பி மீண்டும் அதை ஒழுகுமிடத்திலேயே வைத்தாள். சற்று நேரம் மௌனம் நிலவியது. அந்த மௌனத்தை மாதவனே கலைத்தான்.

''நாளைக்கும் பசிக்கும்மா. ஆனா, நான் வரமாட்டேன்.''

கொழுந்தம்மை அவனை ஏறிட்டு நோக்கினாள்.

''என்னை ஏம்மா முட்டாளா வளர்த்திட்டே? தங்கச்சியை எவ்வளவு புத்திசாலியா வளர்த்திருக்கே?''

கொழுந்தம்மை அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் நெஞ்சில் எண்ணங்கள் சின்னச் சின்ன அலையாய்ப் பெரிய உருக்கொண்டு மோதத் தொடங்கின.

''ஊமைச்சியின் மகன்தானேன்னு ஒதுக்கிட்டியாம்மா?''

கொழுந்தம்மை மருண்டாள்.

''என்னை மன்னிக்கக் கூட உனக்கு மனமில்லியே?''

''மாது, உன்னை மன்னிக்கும்படி நீ ஒன்னும் பண்ணிடலேடா,'' என்றாள் வாய்ப் பூட்டை உடைத்துக்கொண்டு.

''ஒரு சந்தேகம். நான்... நான் உண்மையிலேயே உன் பிள்ளைதானா?''

''மாது!'' என்று பொங்கினாள் தாய். ''மாது, உன்னை நான் மன்னிச்சிட்டேன். போய் அவளையும் கூட்டி வா.''

''எவளையம்மா?''

கொழுந்தம்மை புரிந்து கொண்டாள். அவள் மகன் அனைத்தையும் புரிந்து கொண்டான் என்பதைச் சந்தேகமின்றித் தெரிந்து கொண்டாள். வெட்கத்தால் குன்றிப் போனவளாக, ''புதிர் போடாதே, மாது. போய் உன் தாயையும் கூட்டிவா,'' என்றாள்.

''நான் என் தாய் முன்னாலதான் இருக்கேன்.''

''நீ போமாட்டே. சரி நானே போய்க் கூட்டி வர்றேன்,'' என்று எழுந்தாள்.



மாதவன் சட்டென்று ஓடி வந்து, அவளின் கைகளைப் பிடித்து உட்கார வைத்துத் தானும் அவள் முன் மண்டியிட்டு அமர்ந்தவனாய், ''இப்படியே உட்கார்ந்திரும்மா. நாளைக்கு இங்க இருக்க மாட்டேன். அதனாலே இன்னிக்கு ராத்திரி பூராவும் உன் மடியில படுத்திருக்க ஆசைப்படறேன். மறுக்காதம்மா. நாளைக்கு நான் இங்கே இருக்கமாட்டேன். ஏன் தெரியுமா? நான்... நான் அவளைக் கொன்னுட்டேன். அவளோட இருந்த யாரோ ஒருத்தன்—அவனையும் சேர்த்துத்தான்,'' என்றான். ○

படிப்பகம்

www.padippakam.com

# யுத்த தர்மம்



**என். ஆர். தாசன்**

(ராஜ சபை கூடியிருக்கிறது. நியாயபுரி மன்னர் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறார். முகத்தில் சிந்தனை இழைகள் பின்னிக்கிடக்கின்றன. மந்திரி, தளபதி, ராஜகுரு ஆகியோர் அவரவர் தகுதிக்கேற்ற ஆசனத்தில் அமர்ந்துள்ளனர். சபையை நோக்கிப் பொதுவாக மன்னர் கூறுகிறார்)

*மன்னர்:* உங்களுக்கு என்னைத் தெரியும். போரைத்தேடி நான் அலைபவன் அல்ல. போரைக்கண்டு அஞ்சி ஓடுபவனும் அல்ல. எதற்கும் ஒரு நியாயம் வேண்டும்; காரணம் வேண்டும். சத்திய புரி மீது இந்த நியாயபுரி போர்ப் பிரகடனம் செய்வதற்கு என்ன காரணம் சொல்வீர்கள்? அதாவது போருக்கு வழக்கமாகச் சொல்லப்படுமே காரணங்கள், அவற்றில் ஏதேனும் ஒன்றைச் சுட்டிக் காட்ட முடியுமோ?... தளபதியாரே, நான் சொல்வது புரிகிறதா?

*தளபதி:* (பணிவுடன்) மன்னர் கொஞ்சம் விளக்கிச் சொன்னால்...

*மன்னர்:* சொல்லுகிறேன்... போர் துவங்க பொதுவாக என்ன காரணம் கூறப்படும்? நிலத்திலும் நீரிலும் ஊடுருவல் நிகழ்ந்தது; வனப் பிராந்தியம் ஆக்கிரமிக்கப்பட்டது; பசுக் கூட்டம் பிடித்துச் செல்லப்பட்டது; இவைதானே? இவற்றுள் ஏதாவது ஒன்று நிகழ்ந்ததாகக் கூறமுடியுமா?

*தளபதி:* நிகழாவிட்டால் என்ன, மன்னரே. நிகழ்ந்ததாக நாம் கூற வேண்டியதுதானே.

*மன்னர்:* பொய் கூற வேண்டும். அப்படித்தானே?

*தளபதி:* அரசின் நடவடிக்கைகளுக்கு அது ஆதாரமானதில்லையா?

*மன்னர்:* நான் அப்படி நினைக்கவில்லை. விதி விலக்குகள் இருக்கலாம். விதிவிலக்குகள் ஆதாரமானவைகள் அல்ல.

*தளபதி:* இன்னொரு காரணமும் உண்டு.

*மன்னர்:* சொல்லுங்கள்.

*தளபதி:* நியாயபுரி மக்கள் வரலாறு படைக்க விரும்புகிறார்கள்.

*மன்னர்:* வாழ்வதே வரலாறுதான். நியாயத்திற்கும், தர்மத்திற்

படிப்பகம்

www.padippakam.com

கும் கட்டுப்பட்டு ஆத்மார்த்தமாக வாழ்வது வரலாறாகாதா?

*தளபதி:* வீரவித்தைகள் கற்ற நம் மக்கள் அவற்றை வெளிப் படுத்த வாய்ப்பு கேட்டு நிற்கிறார்கள்.

*மன்னர்:* கூர்வாள் கையில் இருப்பதால், அதன் கூர்மை அறிய எதிர்ப்பட்டவர்களை எல்லாம் குத்திப் பார்க்க விரும்புவதா?

*தளபதி:* தனிநபர் செய்தால் தவறே. அரசுகள் செய்தால் தவ றாக யாரும் எடுத்துக்கொள்ள மாட்டார்கள். வீரவரலாறுகள் யுத்த களங்களில் தானே எழுதப்பட்டுள்ளன.

*மன்னர்:* நான் அப்படி நினைக்கவில்லை. மன ஈடுபாடும், செய் யும் காரியத்தில் விசுவாசமும் இருந்தால், நிற்கிற ஒவ்வொரு இடத்திலும் வரலாறு படைக்க முடியும்.

(மௌனம். மன்னர் மந்திரியை நோக்குகிறார்.)

*மன்னர்:* மந்திரியாரே, நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

*மந்திரி:* நாட்டின் கௌரவம் முக்கியமானது.

*மன்னர்:* சரி... அதற்கு யாரும் பங்கம் விளைவிக்கவில்லையே.

*மந்திரி:* சத்தியபுரி மன்னன் அப்போதப்போது ஏதாவது சொல்லி... ஒற்றர்கள் வந்து கூறுகிறார்கள்.

*மன்னர்:* அவர் என்ன சொல்லுகிறாராம்?

*மந்திரி:* ''சத்தியபுரிக்கு இணையாக எந்த நாடும் இல்லை,'' என்கிறாராம் அந்த மன்னன்.

*மன்னர்:* சரி, சொல்லிவிட்டுப்போகட்டும். அவரின் நாட்டை அவர் புகழ்கிறார். இதுதானே நாட்டுப்பற்று. நமது நாட்டை நாம் புகழ்ந்ததில்லையா?

*மந்திரி:* மன்னரைப் பற்றி கூட....

*மன்னர்:* பழித்தார்களா?... பழித்தது யாரோ? மன்னரா? அல்லது...

*மந்திரி:* மன்னரல்ல. அவரது அவையில் இருந்த புலவர்...

*மன்னர்* (புன்னகையுடன்) புலவர் தானே? என்ன சொன்னார்?

*மந்திரி:* நியாயபுரி மன்னனோடு தங்களை ஒப்பிடுகையில் தாங் கள் 'மகாமேரு' என்றாராம்.

*மன்னர்:* முகஸ்துதி புலவர்களுக்குக் கைவந்த மந்திரம். முகஸ் துதிப் பாடல்களை நீக்கி விட்டால் புலவர்களிடம் எஞ்சுவது பூஜ்யம்தான்.

*மந்திரி:* புலவன் உளறிக் கொட்டினாலும் அரசர் அதட்ட வேண்டும் அல்லவா?

*மன்னர்:* அந்தத் தகுதியை பெறக்கூட முகஸ்துதிகள் தகுதி யற்றவை என மன்னர் நினைத்திருக்கலாம். இங்கே எத்தனை முகஸ்துதி அருவிகள் கொட்டி இருக்கின்றன? ஒரு நகைச்சுவைக் கதையைக் கேட்பது மாதிரி சிரித்திருக்கிறேனே தவிர, வேறு

படிப்பகம்

www.padippakam.com

என்ன செய்திருக்கிறேன்?

(மந்திரி பதில் அளிக்காது நிற்கவே, மன்னர் ராஜகுருவின் பக்கம் திரும்புகிறார்.)

மன்னர்: ராஜகுருவே, தங்களின் கருத்து என்னவோ?

ராஜகுரு: (வெண் தாடியை நீவியபடி) நான் ஒரு ஆன்மீகவாதி. யுத்தங்களையும், பகைகளையும் வெறுப்பவன். ஆத்ம விமோசனமே எனது இலக்கு. ஆயினும் பிரத்யட்ச வாழ்க்கை என்று வருகிற போது...

மன்னர்: ஒன்றை இலக்காக ஏற்றுக் கொண்டுவிட்டால் காலங்களால் அது பழுதுபடக் கூடாது.



ராஜகுரு: பழுது படுவதுதான் யதார்த்தமாய் இருக்கிறது. என்ன செய்வது மன்னரே?...

மன்னர்: விஷயத்திற்கு வரலாமே.

ராஜகுரு: சத்தியபுரி மன்னன் சமண சமயத்தவன். நாமோ சைவம்.

மன்னர்: அதனால் என்ன? அதது அவரவர் நம்பிக்கை. அரசுக்கு அங்கென்ன வேலை?

ராஜகுரு: சமணம் ஒரு நாள் நியாயபுரியின் கதவைத் தட்டாதா.

மன்னர்: தட்டட்டும்; தட்டிவிட்டுப் போகட்டும்.

ராஜகுரு: தட்டப் போவது கையினால் அல்ல; வாளாலும் வேலாலும்.

மன்னர்: மதமும் மார்க்கமும் அரசியல் வடிவம் பெறப் போவதாகக் கூறுகிறீர்களா?

ராஜகுரு: ஆம்.

மன்னர்: வரட்டும். அப்போது பார்க்கலாம்.

ராஜகுரு: வெள்ளம் வரும் முன்...

மன்னர்: வெள்ளத்திற்குச் சரி. நோய் வரப்போகிறது என்பதற்காக இப்போதே மூலிகையைத் தின்ன வேண்டுமா?

ராஜகுரு: தீர்க்க தரிசனத்தோடு நாம் இயங்க வேண்டாமா?

மன்னர்: வெற்று பயங்கள் தீர்க்கதரிசனமாகா.

(சபையில் நிசப்தம். மேலே என்ன பேசுவது என்பது அறியாத தேக்கநிலை. அப்போது அரண்மனைக் காவலாளி அவசர அவசரமாக உள்ளே நுழைகிறான்.)

காவலாளி: மகா மன்னரைப் பார்க்க ஒருவர் வந்துள்ளார். தேசாந்திரி என்கிறார். ஆனால் தீர்க்கதரிசி போல் இருக்கிறார்.

(மன்னர் யோசிக்கிறார். கேள்விப்பட்டவை நினைவிற்கு வருகின்றன. தலையை மெல்ல ஆட்டிக்கொள்கிறார்.)

படிப்பகம்

www.padippakam.com

மன்னர்: அவராகத்தான் இருக்க வேண்டும். ஊர் ஊராக, நாடு நாடாக அவர் சுற்றி வருகிறார். நாடு, மொழி, குலம், மதம் எல்லாம் கடந்தவர். அவர் ஞானப்பிழம்பு; அறிவுச்சுடர்; அனுபவக்கடல். அந்த தீர்க்கதரிசிதான்... நமது பிரச்சினைக்கு அவரால் தீர்வு கூறமுடியும். மந்திரியாரே, நீங்களே சென்று அவரை சகல மரியாதைகளுடன் அழைத்து வாருங்கள்.

மந்திரி: (எழுந்து நின்று) அப்படியே மன்னரே.

(போகிறார். மன்னர் தலை குனிந்தபடி சிந்தனையில் இருக்கிறார். வெண்தாடியுடன், எளிய உடை அணிந்து, நடுத்தர வயதுள்ள தீர்க்கதரிசி மந்திரியுடன் பரிவாரம் சூழ வருகிறார். மன்னர் எழுந்து வணங்குகிறார்.)

மன்னர்: வரவேண்டும். தங்களது வரவு எமது மண்ணைப் புனிதப் படுத்தியது; வரவேண்டும் தீர்க்கதரிசியாரே.

தீர்க்கதரிசி: (அடக்கத்துடன்) நான் வெறும் தேசாந்திரிதான். தீர்க்கதரிசி அல்ல, மன்னவா.

(ஆசனத்தில் அமர்கிறார். சபையை ஒருமுறை நோட்டம் விடுகிறார். கடைசியில் கவலையும், குழப்பமும் தேங்கிய மன்னவர் முகத்தில் அவர் பார்வை வந்து நிற்கிறது.) முக்கியமான ராஜீய விவகாரம் பேசிக் கொண்டிருந்தீர்கள் போலும், நான் சிரமப்படுத்தி விட்டேனோ?

மன்னர்: சிரமம் எதுவும் இல்லை தீர்க்கதரிசியாரே. ராஜீய விவகாரம்தான். முடிவெடுக்க முடியாமல குழம்பிக் கொண்டிருக்கிறோம். தாங்கள்தான் எங்களுக்குத் தெளிவு தரவேண்டும்.

தீர்க்கதரிசி: நானா? ராஜீய விவகாரம் பற்றி தேசாந்திரிக்கு என்ன தெரியும்?

மன்னர்: தேசாந்திரி அல்ல, தீர்க்கதரிசி.

(தீர்க்கதரிசி யோசிக்கிறார். பிறகு அவர் முகத்தில் தெளிவு தெரிகிறது.)

தீர்க்கதரிசி: விவகாரத்தைக் கூறுங்கள். முயல்கிறேன்.

(மன்னரின் வாய் தொடர்ந்து அசைகிறது. சப்திக்காத அசைவுகள். சுழல் விளக்கு மன்னரின் முகத்தில் சலனமற்று நிற்கிறது. மும்முறை அரங்கின் பாதி அளவிற்கு திரை இறங்கி ஏறுகிறது.)

தீர்க்கதரிசி: நல்லது . மன்னவரே, இதுவரை தாங்கள் கேள்வி கேட்டிருக்கிறீர்கள். இப்போது தங்களைக் கேள்வி கேட்கப் போகிறேன்.

(மன்னரின் முகத்தில் லேசான சினக்குறி. சபையில் முணுமுணுப்பு: 'மன்னரைக் கேள்வி கேட்பதா?... மன்னரைக் கேள்வி கேட்பதா?...')

மன்னர்: (முகத்தோற்றத்தை மாற்றிக் கொண்டு) கேளுங்கள் தீர்க்கதரிசியாரே. முடிந்தவரை சொல்கிறேன்.

தீர்க்கதரிசி: எத்தனை காலமாக நீங்கள் இந்த நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறீர்கள்?

படிப்பகம்

www.padippakam.com

மன்னர்: இருபது ஆண்டுகளுக்கு மேல்.
தீர்க்கதரிசி: தங்களின் தந்தை?...
மன்னர் முப்பது ஆண்டுகள்.
தீர்க்கதரிசி தங்களின் வம்சம் எத்தனை தலைமுறையாக ஆண்டு கொண்டிருக்கிறது?
மன்னர்: பதினைந்து தலைமுறைக்கு மேலிருக்கும்.
தீர்க்கதரிசி: இதிலிருந்து ஒன்றை நான் யூகிக்கிறேன். என்ன தான் நல்லாட்சியாக இருந்தாலும் ஒரே வம்சம், ஒரே குலம் நீண்ட காலம் ஆளும்போது மக்களுக்கு சலிப்பு ஏற்படுவது இயற்கை. ஒரு மாற்றத்தை அந்தரங்கமாக உணர்வார்கள்.
மன்னர்: இதெல்லாம் நிகழக் கூடுமோ?
தீர்க்கதரிசி: ஆம், அரசே. நிகழும்; நிகழ்ந்த நாடுகளை நான் அறிவேன்.
மன்னர்: அப்போது அரசுப் பொறுப்பில் இருப்பவன் என்ன செய்வான்? படை பலத்தைக் கொண்டு ஒடுக்குவான்.
தீர்க்கதரிசி: அறிவு பயனற்றுப் போகும் போதே ஆயுதம் தன் வேலையைத்துவக்க வேண்டும்... ராஜதந்திரம் என்று ஒன்று உண்டல்லவா?
மன்னர்: தீர்க்கதரிசியார் என்ன சொல்லுகிறார்கள்?
தீர்க்கதரிசி: மக்களின் கவனத்தை அப்போதப்போது திருப்பிக் கொண்டே இருக்க வேண்டும்.
மன்னர்: என்ன செய்ய வேண்டும்?
தீர்க்கதரிசி: ஒரு யுத்தம் அதற்கு உதவி புரியாதா?
(மன்னர் சிந்திக்கிறார்.)
தீர்க்கதரிசி: இன்னொன்றும் இருக்கிறது.
மன்னர்: சொல்லுங்கள்...



தீர்க்கதரிசி: அரசின் காரியங்களில் பங்குபெற வேண்டும் என்றுஎல்லோருக்கும் தோன்றுகிறது.
மன்னர்: இது சாத்தியம் இல்லையே.
தீர்க்கதரிசி ஆமாம்; சாத்தியம் இல்லாததை ஜனங்களால் நினைக்காமல் இருக்க முடிகிறதா?
மன்னர்: நினைக்கலாம். அரசு விட்டு வைக்காதே.
தீர்க்கதரிசி: என்ன செய்யும்?
மன்னர்: பலவந்தமாக நெஞ்சிலிருந்து நீக்கும்.
தீர்க்கதரிசி: ராஜதந்திரம் இங்கும் செயல் படலாம் இல்லையா?
மன்னர்: விளக்கிச் சொல்லுங்கள்.
தீர்க்கதரிசி: ராஜ காரியத்தில் நாமும் பங்கு பெறுகிறோம் என்று பெரும்பாலானவர்களை உணரச் செய்யும் காரியத்தில் மன்னர் ஈடுபடுத்த வேண்டும்.
மன்னர்: அந்தக் காரியங்களைத் தீர்க்கதரிசியாரே கூறலாம்.
தீர்க்கதரிசி: யோசித்தால் பல காரியங்கள் நினைவிற்கு வரக் கூடும். யுத்தமும் அதில் ஒன்றாக நிச்சயம் இருக்கும்.

படிப்பகம்

www.padippakam.com

(மன்னர் யோசிக்கிறார். இணக்கமாகத் தலையை அசைக்கிறார்.)

*தீர்க்கதரிசி*: மேலும் ஒன்றுண்டு.

*மன்னர்*: சொல்லுங்கள்... சொல்லுங்கள்.

*தீர்க்கதரிசி*: நாட்டை ஆளும் ஆசை எல்லோருக்கும் இல்லா விட்டாலும் ஒரு குறிப்பிட்ட தொகையினருக்கு இருக்கலாம்.

*மன்னர்*: ஆசை யாரை விட்டது?

*தீர்க்கதரிசி*: ஆள்வதின் நோக்கம் என்ன?

*மன்னர்*: மக்கள் உயிரையும், உடலையும், உடமையையும் காக்க.

*தீர்க்கதரிசி*: ஒரு யுத்தத்தில் ஈடுபட்டவர்கள் என்ன நினைக் கிறார்கள்?

*மன்னர்*: நாட்டைக் காப்பதாக.

*தீர்க்கதரிசி*: அதாவது அரசனின் காரியத்தைச் செய்வதாக. அதாவது ஆளுவதற்குச் சமதையான பெருமித உணர்வைக் காண்கிறார்கள்.

*மன்னர்*: ஆமாம்.

*தீர்க்கதரிசி*: ஒப்புக்கொண்டு விட்டீர்கள். அவ்வளவுதான்.

(மன்னர் யோசிக்கிறார். சபையில் நிசப்தம். தீர்க்கதரிசி புறப் படத் தயாராகிறார்.)

*மன்னர்*: முடிவாக தாங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?

*தீர்க்கதரிசி*: சொல்ல வேண்டிய அனைத்தையும் சொல்லிவிட்ட தாகவே நினைக்கிறேன்.

(கண்ணை மூடியபடி மன்னர் ஆழ்ந்து சிந்திக்கிறார். பிரச்ச னையிலிருந்து விடுபட்ட பெருமிதம் தெரிகின்றது.)

*மன்னர்*: புரிந்துவிட்டது. தெளிவு கிடைத்து விட்டது.

(மந்திரியின் பக்கம் திரும்புகிறார்.)

*மன்னர்*: மந்திரியாரே, விலை உயர்ந்த பரிசில்களை தீர்க்கதரிசி யாருக்குக் கொடுத்தனுப்புங்கள். நமது ராஜபரிவாரங்கள் நம் நாட்டு எல்லைவரை அவருடன் செல்லட்டும்.

*தீர்க்கதரிசி*: வேண்டாம். எதுவும் வேண்டாம். தேசாந்திரிக்கு இவையெல்லாம் தேவையற்றவை.

(கை கூப்பியபடி தீர்க்கதரிசி புறப்படுகிறார். மன்னரும், மந்திரி பிரதானியர்களும் பதிலுக்கு கைகூப்பி நிற்கின்றனர். அவர் உரு வம் மறைந்ததும் மன்னரின் முகத்தில் வீரச் சாயல் படிகிறது. கைகள் மீசையை முறுக்கி விடுகின்றன. சிங்கம் பிடரியை சிலிர்ப்பது போல் தன்னை உலுக்கிக் கொள்கிறார். குரலில் ஆவேசக் கனல் வந்து கலக்கிறது.)

*மன்னர்*: படைகள் அணிவகுக்கட்டும். பாசறையில் ஆயுதங்கள் குவியட்டும். யுத்தத்திற்கான சகல ஆயத்தங்களும் உடனே துவங்கட்டும்.

(முரசு அதிர்கிறது.) —திரை இறங்குகிறது.—

படிப்பகம்

www.padippakam.com

# புதுக் கவிதை- காலம் காட்டும்

இரா. காமராசு

இன்றைய தமிழ்ப் புதுக் கவிதைகள் சமகால வாழ்வியல் கருத்தோட்டங்களான சமூகச் சீரழிவுகள், தலித் இலக்கியம், பெண்ணியம், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு உள்ளிட்ட பலவற்றையும் உள்வாங்கி ஆழமான கவிதைகளாக வெளிவந்திருக்கின்றன. மனதின் சூட்சுமத்தை விவரிப்பனவும், இருத்தலியற் கருத்தை முன்வைக்கின்றனவும், புரிதலுக்கு அப்பாற்பட்ட 'புரிதலை' வலியுறுத்துவதுமான ஏராளமான முயற்சிகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

கவிதையோ, பிற இலக்கியமோ எதுவாகயிருந்தாலும் அத்துறைபற்றிய ஆழ்ந்த படிப்பும் முறையான பயிற்சியும், முன்னோடிகளின் முத்திரைகளும், சமகாலத் தேவைகளும் உணரப்பட்டு படைக்கப்பட்டால், அப்படைப்பில் சாரம் இருக்கும்.

"இன்று உரைநடைக் காலம். அதன் செல்வாக்கால் கவிதையும் உரைநடையில் எழுதப்படுகிறது" என்ற சரியான கருத்தை முன்மொழிந்துவிட்டு, வசன கவிதைகள் பற்றிய அச்சத்தைத் தமிழண்ணல் எழுப்பியிருப்பது பொருத்தமானதாக இல்லை.

இன, மொழிச் சிக்கல்களும், அன்றாட வாழ்க்கை நெருக்கடிகளும், கலாசாரச் சீர்கேடுகளும், ஒடுக்குமுறையும், நம்பிக்கையற்ற தன்மைகளுமே இன்றைய 'வாழ்க்கை'யாக ஆகிவிட்ட நிலையில், அந்த வாழ்விலிருந்து- சமூகத்திலிருந்து தோன்றும் கலையிலும், இலக்கியத்திலும் வடிவ ஒழுங்கையும், ஓசை அழகையும், இசை அமைதியையும் எதிர்பார்ப்பது சரியானதாக இருக்க முடியுமா? தனி மனிதனின், மனிதக் கூட்டத்தின் முகக் கிழிசல்கள் யாவும் இலக்கியத்திலும் கீறல்களை உண்டு பண்ணத்தான் செய்யும்.

உள்ளடக்கத்தைப் பொருத்தே வடிவம் அழுத்தம் பெறுகிறது. தொடர்ந்து முழுவீச்சோடு மரபுக் கவிதைகளை எழுதி வருவோரைத் தமிழுலகு மதித்தும், போற்றியும் வருவதாகவே நினைக்கிறேன்.

இறுதியாக- மரபோ, புதிதோ கவிதையாக இருக்கட்டும். சொல்லில், பொருளில், வடிவில் புதுமை ததும்பட்டும். வக்கிர மனோ பாவங்கள் ஒழிந்து மானுடநேயம் மிளிரட்டும். எது கவிதை என்பதையும், எவன் கவிஞன் என்பதையும் காலம் என்கிற திறனாய்வாளன் நாளை அறிவிப்பான்.

நன்றி: தினமணி- தமிழ்மணி

படிப்பகம்

www.padippakam.com

# யோசிப்பு

## அனலேந்தி

சுற்றிலும் இனிமையான
சங்கீதம்;
கேட்டு நிற்க ஏராளமான
காதுகள்;
வாசித்தவன் கவனம்
நாணயச் சத்தத்தில்.

ஃ

நீண்டன நிழல்கள்;
நிற்க மனிதர்கள்;
மரத்தின் கிளைகளில்
மறைந்தது கோடரி!

ஃ

கேட்டது கிடைத்ததால்
அலட்சியம்;
விரல்களையும்
பண நோட்டாக்கினேன்;
இன்று புசிக்க இல்லை கைகள்!

ஃ

நோட்டுக் கற்றைகளில்
மூழ்கிற்று வீடு;
தொட்ட இடமெல்லாம்
கிடைத்தது பொன்;
தாகத்திற்கு நீரில்லை.

ஃ

கஞ்சி குடித்தவரை
நான் நீதிமான்.
திடீர் சொந்தமாய்
மாளிகைகள்.
நடுங்கினேன் சட்டத்திற்கு!

ஃ

மறுபடி மறுபடி கண்முன்
மரங்கள்;
சங்கீதம் பாடும் பறவைகள்;
என் முதுகெல்லாம்
பாலைப் புண்!

ஃ

பாறையின் நடுவில்
பிளந்தபடி பழ மரம்.
பறித்த விரல்களைக்
காணவில்லை.

# எச்சங்கள்

## இரா. காமராசு

மனிதன் புனிதமானவன்.
ஆனால் நீ...
வாசிப்பு அறையில்
குப்பைகளை அடுக்கினாய்.

சாப்பாட்டுத் தட்டில்
பாட்டில்களைப்
பங்கு வைத்தாய்.
இல்லறத்தில்
கஜானாவோடு மட்டுமே
கைகுலுக்கினாய்.

பூஜையிடத்தில்
கொள்ளிக் கட்டைகளோடு
குடும்பம் நடத்தினாய்.
உன் மூளை மடிப்புகளிலும்
புகை மூட்டம்.


மனிதப் பூக்களின்
சரணாலயமாக வேண்டிய
உன் இதயத்தை
ஈசல்களுக்கா
இரையாக்குகிறாய்?
நிறுத்தடா!
நாளைய சந்ததி உன்னைக்
கேள்வி கேட்கும்.

படிப்பகம்

www.padippakam.com

# வலிய சக்தி

/ வல்லிக்கண்ணன் /



**நா**கரிகப் பெரு நகரத்தின் நெரிசல் மிகுந்த பகுதி ஒன்றின் குறுகலான சந்துகள் வழியாக நண்பர் ஒருவரும் நானும் நடந்து கொண்டிருந்தோம்.

கலைத்துவிடப்பட்ட எறும்புக் கூட்டம் போல சிறுபிள்ளைகள்—பல வயதுக்கு உட்பட்ட ஆண்கள், பெண்கள்— குறுக்கும் நெடுக்குமாக நகர்ந்தும், நின்றும், அசைந்தும் ஆடியும் ஓடியும் காட்சி தந்தனர். வசதிகளோ வளங்களோ இல்லாத வட்டாரத்தின் உயிரினங்கள். பலவகைப்பட்ட உருவங்கள்.

அவர்களைக் கவனித்த நண்பர் சொன்னார்: ''இவங்க எல்லாம் பெரிசாக என்னவோ சாதிக்கப் போகிற மாதிரித்தான். அதுங்களை பெற்றவங்க அப்படித்தான் நினைப்பாங்க. இதுகள் எல்லாம் எப்படியோ வளர்ந்து, என்னென்னவோ ஆகி, மனுசங்க என்று பெயர் பண்ணி, எப்படியோ காலம் கழித்து, எப்படியாவது செத்துத் தொலையும்!''

சிறிது நிறுத்திவிட்டு அவர் தோடர்ந்தார்:

''பார்க்கப்போனால் எல்லோருடைய நிலையும் இதுதானே! பிறக்கிறோம். வளர்கிறோம். என்ன என்னவோ செய்கிறோம். எப்படியோ காலம் கழிக்கிறோம். நாமும் வாழ்கிறோம் என்று சொல்லிக் கொள்கிறோம். ஆனாலும், பிரமாதமாக எதையோ சாதித்துக் கொண்டிருப்பது போல்தான் ஒவ்வொருவருக்கும் நினைப்பு. நாடகமே உலகம்னு சொன்னது சரிதான்!''

வாழ்க்கை இயக்கங்களை கவனிக்கிறபோது அந்த நண்பர் பேச்சில் உள்ள உண்மை உறுத்தல் ஏற்படுத்தவே செய்யும்.

வாழ்க்கையில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா? சிந்திக்கும் திறன் பெற்ற ஒவ்வொருவர் உள்ளத்திலும் இந்தக் கேள்வி எப்பொழுதாவது அலை எறியவே செய்யும்.

வாழ்க்கையில் அர்த்தம் உண்டு என கருதுகிறார்கள் பலர். அர்த்தம் எதுவுமே கிடையாது என அடித்துச் சொல்கிறார்கள் பலர். எதுவுமே புரியவில்லை என்று புலம்புகிறவர்கள் பலர். எதைப் பற்றியும் எண்ணாமல், வெந்ததைத் தின்று வளர்ந்து, வேளை வந்தால் சாவது என்று இருப்பவர் பெரும்பலர்.

ஒவ்வொருவருக்கும் 'பிறப்பு' ஒரு தற்செயல் நிகழ்ச்சி. 'இறப்பு' கண்டிப்பாக நிகழ்ந்து தீரும் ஒரு விபத்து. இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட வாழ்க்கை பெரும்பாலோருக்கு துயரச்சுமை; சோகநாடகம்; நரக வேதனை; கடும் தண்டனை; விரக்தி- ஏமாற்றம்- ஏக்கம்- அவநம்பிக்கை- கவலைகள்- பிரச்னைகள் மண்டிய அந்தகாரவெளி.

படிப்பகம்

www.padippakam.com

ஒரு சிலருக்கு அளவில்லாத ஜாலி; இனிய விளையாட்டு, சொகுசு-சுகம்- உல்லாசங்கள் முதலியன மினுக்கும் அற்புதம்.

இரண்டு நிலைகளுக்குமாக ஊசலிட்டு உழல்வோருக்கும் குறைவு இல்லை.

யார் வாழ்வது சரியானமுறை? எவர் போக்கு சரியானது?

யார்தான் 'அறுதியிட்டு உறுதி கூற' இயலும்? அவரவர் வாழ்கிற முறைதான் அவரவர்க்குச் சரியானதாகத் தோன்றுகிறது. அடுத்தவரைப் பழிப்பதும், பரிகசிப்பதும், கண்டிப்பதும், குறை கூறுவதும், மட்டம் தட்டுவதும், புறம் பேசிக் களிப்பதும், பெருமைப் படுவதும் மனித இயல்புகளாக இருக்கின்றன.

தானும் தன்னைச் சேர்ந்தவர்களும் நன்றாக வாழ்ந்தால் போதும் என்ற நினைப்பு. தாமும் தமரும் மட்டுமே சுகமாக சகல வசதிகள் வளங்களோடு வாழ வேண்டும் எனும் ஆசை—இதுவே பெரும்பாலும் மக்களை ஆட்டுவிக்கிறது.

பணம் சம்பாதிக்க வேண்டும். மேலும் மேலும் பணம்—அதிகம் அதிகமாக, எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு சம்பாதிக்க வேண்டும். அதுவும் சுலபமாக, வெகுவிரைவில் அடைந்தாக வேண்டும். இவ்வெண்ணம் வேகமாய், வெறியாய், பெரும் உந்து சகதியாய் மனிதரை இயக்கிக்கொண்டிருக்கிறது.

சுகமாக, நன்றாக, ஆனந்தமாக வாழ்வதற்குப் பணம் தேவைதான். ஆனால், பணமே—பணம் மட்டுமே—வாழ்க்கை ஆகிவிடுவதில்லை. ஆகவும் முடியாது.

வாழ்க்கையை இனிதாக்கும் சாதனங்களில் பணமும் ஒன்று.

இதை பெரும்பாலோர் உணர்ந்து கொள்ளவேயில்லை. உணர்ந்தவர்கள்கூட உரிய முறையில் செயல்புரிய மறுக்கிறார்கள். ஆகவே, பணம் பணம் என்று வெறி பிடித்தவர்கள் போல் திரிகிறார்கள். பேயாய் உழைக்கிறார்கள். அமைதி காண முடியாது அல்லலுறுகிறார்கள். விதவிதமான நோய்களை அனுபவித்தவாறு அவதிப்படுகிறார்கள்.

''சருகு அரிப்பதற்குத்தான் பொழுதெல்லாம் போய்விடுகிறது. குளிர்காய்வதற்கு நேரமே கிடைப்பதில்லை,'' என்று ஒரு நண்பர், வாழ்க்கை நிலை பற்றி, குறைபட்டார் ஒரு சமயம்.

தற்கால மனிதர் பெரும்பாலோரின் நிலையே இதுதான். பணம் பண்ணுகிற முயற்சியிலேயே வாழ்வின் பெரும்பகுதி செலவாகிவிடுகிறது; அமைதியும் ஆனந்தமும் பெற்று வாழ்க்கையை அனுபவிப்பதற்கு அவர்களுக்கு அவகாசம் கிடைப்பதில்லை.

''நின்று, நெடுகிலும் பரக்கப் பார்த்து, வேடிக்கை கண்டு களிக்க நேரம் இல்லாத வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா?'' இப்படி கருத்து உதிர்த்திருக்கிறார் ஒரு கவிஞர்.

வாழ்க்கையில் சந்தோஷங்களுக்குக் குறைவே கிடையாது. சந்தோஷங்களைப் பணம், காசு செலவு பண்ணித்தான் பெற

படிப்பகம்

www.padippakam.com

முடியும். பணம் இருந்தால்தான் சந்தோஷமாக இருக்கமுடியும் என்று எண்ணுகிறார்கள் அதிகம்பேர்.

ஆனால், ஆனந்தமாக வாழ்வதற்கு—சந்தோஷங்களை அனுபவித்து ரசித்து மகிழ்வதற்கு— பணம் ஒரு பிரச்னையாக இருப்பதில்லை வாழ்க்கையில்.

அதனால்தான் மகாகவி பாரதியார், உவகைப் பெருக்குடன் பொங்கிப் பூரித்தார், 'எத்தனைகோடி இன்பம் வைத்தாய் எங்கள் இறைவா, இறைவா, இறைவா!' என்று!

அவற்றைக் காணக் கண்கள் வேண்டும். ரசிக்க மனம் வேண்டும். அனுபவிக்க நேரம் வேண்டும். இது முக்கியம்

ஆனந்தம், அமைதி— ஒருவனுக்கு அவனது வாழ்விலே சித்திக்க வேண்டிய உயர்வுகள் இவை என்று சொல்லப்பட்டு வருகிறது, காலம் காலமாக.

ஆனந்தத்தை அடைய முடியாது, இருக்கிற அமைதியையும் இழந்துவிட்டு, சஞ்சல மனத்தராய் சஞ்சரிப்பதே பொதுவாக மனித இயல்பாகவும் அனுபவமாகவும் இருந்து வருகிறது.

இத்தகைய சமூக சூழ்நிலைகளில் சந்தோஷமாகவும் மன நிறைவோடும் ஒருவர் வாழ முடிந்தால், அது அவர் பெற்ற பெரும் பேறு என்றே சொல்ல வேண்டும்.

தான் மட்டும் சந்தோஷமாக நாளோட்டுவதில் பெருமை அதிகம் இல்லை. கூடிய வரையில் மற்றவர்களும் சந்தோஷமாக இருக்கத் துணை புரிகிறவன் நல்ல காரியம் செய்பவனாவான்.

இதற்கு நல்ல மனம் வேண்டும்.

மனம்தான் வாழ்க்கையை நல்லதாக ஆக்குகிறது. அல்லது மோசமானதாகச் சீர்குலைத்து விடுகிறது. அதனாலேயே மாகவிஞன் சொன்னான், 'நரகத்தை சொர்க்கம் ஆக்குவதும், சொர்க்கத்தை நரகமாக மாற்றுவதும் மனமே' என்று.

வாழ்க்கையில் அர்த்தம் இருக்கிறதா; அர்த்தமே இல்லையா என்று ஆராய்ந்து கொண்டிருக்க வேண்டியதில்லை. அவரவர் வாழ்க்கையை அவர் அவரே அர்த்தமுள்ளதாக ஆக்கிக்கொள்ள முடியும்— வேண்டும். அதற்கு வாய்ப்புகள் நிறையவே உண்டு.

அவரவர் இயல்புகளுக்கு ஏற்றபடி, சூழ்நிலைக்குத் தக்கபடி, ஆற்றலுக்கு ஏற்றாற்போல, தத்தமது வாழ்க்கையைப் பண்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம் ஆகும்.

வாழ்க்கையில், பிறப்புக்கு முன்னும் இருட்டு; இறப்புக்குப் பின்னும் இருட்டு. அதனால் இரண்டுக்கும் இடைப்பட்ட வாழ்வும் இருள் மண்டியதாக இருக்க வேண்டியதில்லை. அதை ஒளியுறுத்தி, தன்னைச் சுற்றிலும் நல்ஒளி பரப்பக் கூடிய சக்தி மனித மனதுக்கு இருக்கிறது. வலிமையான ஆற்றல் பெற்ற மனம் ஒரு அற்புதம் ஆகும். ○

படிப்பகம்

www.padippakam.com

—சென்ற இதழ் தொடர்ச்சி

# பரிணமித்து வரும் கவிதை யியல்

## நெல்லை சு. முத்து



### வசன கவிதை:

அனேகமாக செய்யுள் நடை பா, பாட்டு, பாசுரம், கீர்த்தனைகள் எழுதியவர்களைக் கவிராயர்கள், பண்டிதர்கள், புலவர்கள், வித்துவான்கள், பக்தர்கள் எனலாம்.

''தமிழில் வசன கவிதை எழுதிய எழுத்தாளர்களுக்கு ஆங்கிலத்தில் எவ்வளவு பரிச்சயமும் பயிற்சியும் இருந்ததோ, அந்த அளவுக்கு தமிழ் உலகம் பண்டு தொட்டுப் படைத்து வந்த இலக்கியங்களிலோ, இலக்கணங்களிலோ கிடையாது,'' என்பார் ரகுநாதன். (புதுமைப்பித்தன் கவிதைகள், முன்னுரை.)

மணிக்கொடி பரம்பரையினர் தொடங்கி வைத்த இந்த வசன கவிதை, 'எழுதுபவன் தன் மனதில் தோன்றியதை பட்டை பிடிக்காமல், மெருகு தீட்டாமல், தூசு துரும்பு துடைக்காமல், குறை நிறை நிரவாமல், அப்படி அப்படியே பிறந்த மேனியாகப் படைத்து விடுவது என்பதுதான்.'

பெரும்பாலும் சிறுகதை எழுத்தாளர்களே இம் முயற்சியில் ஈடுபட்டதால் 'வசன கவிதை எழுத்தாளர்' என்று இவரைக் குறிப்பிடுகிறோம்.

''வசன கவிதை தனக்குத் தானே ஒரு தனித்தன்மை கொண்டது. அது திடீரென்று உருவாகும் உருவ அமைப்பு. அதற்கு ஆதியந்தமென்ற எல்லைகள் கிடையாது. அதற்கு முடிவு என்று ஒன்றில்லை,'' என்கிற டி. எச். லாரன்ஸ் கருத்துப்படி வசன கவிதையை முதலும் முடிவுமாகக் கருதிய ந. பிச்சமூர்த்தி, ''வசனத்தை கவிதையைப் போல் செயல் படுத்த முடியும் அவ்வாறு செயல் படும்பொழுது வசனம் தன் தொழிலை விட்டுக் கவிதையின் தொழிலை ஏற்றுக் கொண்டு விடுகிறது,'' (எழுத்து —14) என்றார். அப்போது தான் நாம் இதுவரை வேறு படுத்திக் காட்டி வந்த உரை நடையும் செய்யுள் நடையும் உறவு கலந்தாடப் பிணைந்து புணர்ந்தன.

மணிக்கொடி இயக்கத்தினரை மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் என்றும், ''மரபு சார்ந்த பழமைகளை இழக்க மனமின்றி சுமந்து கொண்டிருக்கிற நிலையிலும் கூட மனித சமத்துவத்திற்கு அவர்கள் உணர்வு பூர்வமாக விழைந்

படிப்பகம்

www.padippakam.com

மக்கள் பெருக்கம் பற்றி நாம் எல்லோரும் கவலைப்படுகிறோம். ஆனால் கவலைப்பட வேண்டிய சரியான நேரத்தில் கவலைப்படுவதில்லை.

—ஆர்தர் ஹோப்

தார்கள்,'' என்றும் சுந்தரராமசாமி வலியுறுத்துகிறார்.(ந.பிச்சமூர்த்தியின் கலை மரபும் மனித நேயமும்.)

புதுக்கவிதை:

வசனகவிதையில் இல்லாததொரு ஒலி நயத்தினை, இதயத்தின் தாளலயத்தினை வனைந்து கொள்ளும் புதுக்கவிதையில் வித்தியாசமானதொரு சொல் அமைவு உண்டென்று சி.சு.செல்லப்பா, கு.ப.ரா, வல்லிக்கண்ணன் போன்றோர் முனைந்துரைத்தனர். ஒலிநயத்தை 'பிரமை' என ஓரங்கட்ட இயலாது என்பது இவர்தம் வாதம்.

எனினும், '''நடைமுறையில் தேவைக்கு ஏற்ப வேறுபடும் ஓசை நயத்தை உண்டாக்கிக் கொள்ளக் கூடிய தமிழ் மொழிப் பயிற்சியும் பரிச்சயமும் செல்லப்பா குழுவினருக்கு என்றுமே இருந்ததில்லை. எனவேதான் 'ஸர்ரியலிஸம்', 'இமேஜிஸம்' முதலிய ஆங்கிலச் சொற்களை அடிக்கடி உச்சரித்த வண்ணமிருந்தனர். மொத்தத்தில் வார்த்தைகளைப் பிளந்து முறித்துப் போட்டு எழுதும் சுய திருப்தி முயற்சியாகவே அவர்களது புதுக்கவிதை அமைந்தது,'' என க. கைலாசபதி (தமிழன்பனின் 'தோணிவருகிறது'-முன்னுரை) போன்றோர் விமர்சித்தனர்.

இந்தக் கட்டத்தில்தான் கவிதை கலைக்காகவா, மக்களுக்காகவா என்கிற பட்டிமன்றம் சக்தியுடன் ஆரம்பமானது.

மணிக்கொடி, எழுத்து, நடை, கசடதபற போன்ற சிறு இலக்கிய சஞ்சிகைகளின் புதுக்கவிதையாளர்கள் முதலில் தங்களுக்காகவே எழுதினர். கவிதை நுகர்பொருள் அல்ல என்பது அவர்தம் தீர்மானம். அதே வேளையில் கவிதை பிறருக்காகவே என முழங்கும் பாங்கில் 'வானம்பாடி'க் கவிஞர்கள் செவ்வானில் சிறகு விரித்தனர்.

ஆக, காலவட்டத்தில் புதுக்கவிதையின் உள்ளுருவம் சிதைந்து உள்ளடக்கம் துருத்திக் கொண்டது. இதனாலேயே எழுது கலமெடுத்தவரெல்லாம் கவிஞரானதொரு தேக்க நிலை புதுக்கவிதை வரலாற்றில் தவிர்க்க முடியாததாயிற்று. வார்த்தைகள் மலிந்தன.

''இலக்கணச் செங்கோல்
யாப்புச் சிம்மாசனம்
எதுகைப் பல்லக்கு
மோனைத் தேர்கள்
தனிமொழிச் சேனை
பண்டித பவனி
இவை எதுவும்
இல்லாத......

படிப்பகம்

www.padippakam.com

கருத்துக்கள் தம்மைத் தாமே
ஆளக் கற்றுக் கொண்ட
புதிய மக்களாட்சி
முறையே
புதுக்கவிதை''

என்கிற மு மேத்தாவின் இலக்கணம் இளைய தலைமுறையினரை வசீகரித்தது.

தன்னுணர்ச்சிப் பாடல்கள் செய்யுள் நடையிலிருந்து வசன வாசல் வழியே புதுக்கவிதைகளாகப் பவனி வரத் தொடங்கிய வரலாற்றில் புலவர்கள், மரபுக் கவிஞர்களாகி, வசன கவிதை எழுத்தாளர்களாகி புதுக்கவிதையாளர்களாயினர். இலக்கிய வடிவில் ஏற்பட்ட பரிணாம வளர்ச்சி இவர்கட்கு வழங்கிய அடையாளச் சீட்டுகள், அடைமொழிகள் இவை.

உள்ளடக்கமோ வாழ்த்து நிலை. முருகியல், இறைவணக்கம் நாயக வழிபாடு, நாட்டுப் பற்று, தேசிய ஒருமைப்பாடு, திராவிட இயக்கம், தொழிலாளர் முன்னேற்றம், குழந்தை நலம், குடும்பக் கட்டுப்பாடு, காமக்காதல், பெண் விடுதலை வரதட்சிணைக் கொடுமை, என்றெல்லாம் சுற்றித் திரிந்து விட்டு, பழையபடி இயற்கை, அழகுணர்ச்சி, மனமுறிவு, விரக்தி, தனி மனித விருப்பு வெறுப்பு, காழ்ப்புணர்வு, அரசியல், அங்கதம், சிலேடை, சொற்சிலம்பம் என்கிற கட்டுப் பெட்டிக்குள் வந்து அடங்குகின்றது.

இலக்கியம்படைக்கிறோம் என்கிற பாவனையில் தமக்குத் தாமே எழுதிய கவிதைகளை தத்தமக்குரிய சிற்றிலக்கிய இதழ்களில் பிரசுரித்து ஆத்ம திருப்தியடையும் எழுத்தாளர் வரிசை நீண்டு கொண்டே செல்கிறது.

''சிறு பத்திரிகைகள் இலக்கியத்துக்குத் தொண்டு செய்வதற்குப் பதில் சிறு சிறு குழுக்களையும் அக்குழு கோஷ்டிகளைச் சேர்ந்தவர்களின் சின்னத் தனமான போக்குகளை வளர்த்துக் கொண்டிருப்பதையும் பல ஆண்டுகளுக்குப் பிறகு தமிழகம் வந்த பின்னால் உணர முடிகிறது,'' (தலையங்கம், முன்றில், அக்டோபர் '88) என்று ஆதங்கப் பட்டார் க. நா. சு.

சந்தடிச் சாக்கில் புத்திசாலித் தனமான கவிதை எழுதுபவர் பலர் முனைந்தனர்.

'இரவிலே வாங்கினோம்
இன்னும் விடியவே இல்லை'

என்கிற வரிகள் கிராமீயத் திரைப்படம் ஒன்றினால் அதி பிரபலமாயிற்று. அதே வேளையில்,



''இரவில் வாங்கும் இந்திய
விடுதலை
என்று விடியுமோ யார் அறி
குவரே!''

என்று 15-1-47 'பொதுநலம்' இதழில் ''விடியா விடுதலை விடிவதெந்நாள்?'' ('நாள்மலர்கள்' தொகுப்பு) எனும் கவிதை

படிப்பகம்

www.padippakam.com



மக்கள் திரளைப் பசியிலும் அழுக்கிலும் அறியாமையிலும் வாழ்வதிலேயே திருப்திப் பட்டுக்கொள்ள வைக்கும் எந்த மதத்தோடும் எனக்கு ஒட்டோ உறவோ கிடையாது.

—நேரு

தீட்டிய பாரதிதாசன் ஆவேசம் அறியப் படாமலும் போயிற்று.

நவீன கவிதை:

கவிதையின் உருவம்—உள்ளடக்கம் போன்ற சாமாச்சாரங்கள் இனித் தேவையில்லை என்பார் சிலர். கவிதை எழுதுபவரின் நோக்கத்தினைப் பொருட்படுத்தாது கவிதையின் எழுது பிரதி (Writerly Text)யும் வாசிப்புப் பிரதி (Readerly Text)யும் மாறிக் கொண்டே வரும். மொழி இயலுடன் அமைப்பியல் வாதமும் உள்ளிட்ட 'நவீன கவிதை' (Modern poetry) அறிவியல் மற்றும் இசை, ஓவியம், சிற்பம் முதலான இதர கலைத்துறைகளுடன் ஒன்றிய நிலைமை சூலுக்குள் காலுதைக்கிறது. எனினும் இந்த நவீன கவித்துவர்களின் எழுத்து பெரும்பாலும் புதுக் கவிதையாளருக்கே கூட பிடிபடாமற் போகும் அவலம் இன்று.

பிரம்மராஜனின் 'ஞாபகச் சிற்பம்' கவிதைகள் இம்முற்றிய நிலைக்குச் சான்று. கோனார் தமிழ் உரை நூலில் நெடுநல் வாடைக்குப் பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரை, கருத்துரை, பகுபத இலக்கணம் போன்றதொரு முன்னுரையுடன் கம்ப்யூட்டர், பெசிபிள், ICBM, ஸிபிலிஸ், ஸிந்தடிக் புல்வெளி, அதிவயலட் கதிர் வீச்சு, ரோபோட், கேள் எல்லை (Mach's Limit for listening என்கிறார் நாகார்ஜுனன்) இப்படியாக ஏகப்பட்ட விஞ்ஞானக் கலைச் சொற் கோவைகளுடன் கூடிய கணிப்பொறி தயாரித்த அகராதிக் கவிதைகள் தாங்கி இந்நூலின் ஆசிரியர்—ஆங்கிலத்தில் சிந்தித்து, தமிழில் எழுதுகிறார். 'தெரிதல் புரிதல்' என்ற தலைப்பில் 'நான் எழுதிக் கொண்டிருப்பதை எழுதிக் கொண்டிருக்கிறேன். எழுதிக் கொண்டிருக்கிறேன் என்பதை எழுதிக் கொண்டிருக்கிறேன். எழுதிக் கொண்டிருப்பதாக எழுதுவதை எழுதுகிறேன். எழுதுவதை எழுதுகிறேன் என்று எழுதிக் கொண்டிருப்பதை எழுதுகிறேன். எழுதுவதால் எழுதுகிறேன். தெரிகிறேன் என்பதால் பார்க்கிறாய். பார்ப்பவன் பார்க்கப்படுகிறான். தெரிகிறதா...'' என்று தொடர்கிறது ஒரு கவிதை.

மலையாளத்தில் நாப்பழக்கத்திற்கென ஒரு பத்தி கூறுவார்கள். அதனைத் தமிழில் மொழி பெயர்ப்பதானால் இப்படிச் சொல்லலாம்: ''புரிந்த

படிப்பகம்

www.padippakam.com

தென்றால் புரிந்தது என்று கூறணும். புரியவில்லை என்றால் புரியவில்லை என்று கூறணும். புரியாததைப் புரிந்தது என்று கூறினால் புரிந்ததும் கூடப் புரியாமல் போய்விடுமென்று நன்கு புரிந்து கொண்ட பின்னரேயே புரியாததைப் புரிந்தது என்று கூறணும். என்ன புரிகிறதா?''

'பிரதிமையின் போலிகள்' என்ற தலைப்பில் பிரம்மராஜனின் மற்றொரு கவிதை இது:

''ஆட்படுதல்: முலையொரு ஜோடி உதடுகள் இடுப்புச்சதை சுமார் ஈராயிரம் நாட்களில் சிலதில் யோனி இனி மிதமிஞ்சி வெந்து கழன்ற இறைச்சி மிஞ்சாத வெற்றெலும்பு.''

இவரது ''கவிதை புரிந்து கொள்வதற்காகவே எழுதப்படுகிற'' தாம், நாகார்ஜுனன் விளக்குகிறார் இந்நூல் முன்னுரையில்.

காளமேகப்புலவர் மொழி சமுத்திப் பாடலில் கண்டது மாதிரி 'போல' என்கிற சொல்லை 'கேட்பதை', 'பார்ப்பதை,' 'செல்வதை,' 'செதுக்குவது' 'சிற்பம் ஒன்றில்' ஆகிய ஒவ்வொரு சொல்லுடன் கூட்டிப் படிக்குமாறு கட்டமிட்டுக் கோடு நீட்டி வரைந்து காட்டும் ஒரு சில கவிதைகளும் நோக்குமிடத்து, சொல், பொருள், உள்ளுருவம், செய்தி அனைத்துக்கும் அப்பால் கலையம்சமே அற்றதொரு வரிவடிவத்தினை கவிதையாய்க் காண நேர்கின்றது. ஆயினும் இன்று இது ஒரு பரிசோதனையாகக் கூட இருக்கலாம்.

கவிதையில் மட்டுமின்றி எந்த ஒரு இலக்கியத்திலும் நாம் புரிந்து கொள்ள முயலுவது வெறும் வார்த்தை வடிவங்களை அல்ல.

''புகையை நம்பி உணவை வெறுப்பதை இந்த ஒரு (கவிதை) விஷயத்தில் தானா பார்க்கிறோம்?'' என்று கவிதையாய் வினவுகிறது 'கணையாழி' (ஏப்ரல்-1991)யில் தராசு.



வார்த்தைகளை நம்பி புரியமறுதலித்து கவிதையை வெறுக்கக் கூடாது. என்றாலும், ''புரியாத் தன்மை என்பது பிரதானமாய் கவிஞனிடத்தில் இல்லை; மாறாக வாசகர்களாகிய நம்மிடம்தான் உள்ளது. மேலோட்டமாகவும் துல்லியம் இழந்த வகையிலும் நமது தெளிவும் தர்க்கமும் இருக்கின்றன,'' (மீட்சி-27, 1987) என்கிறார் பிரம்மராஜன். இது ஒரு தட்டிக் கழிப்பு வேலை— வெற்றுக் காகிதத்துக்கும் கவிதை முலாம் பூசி அர்த்த வியாக்கியானங்கள் கற்பிக்கும் வியர்த்தம் என்றுகூடத் தோன்றும்.

இந்த நவீன கவிதையினை 'அதிபுதுமையியற் கவிதை(Ultra Modern Poetry) என்கிறார்கள். ஓவியக்கலை உத்திகள் சிலவற்றை கவிதைக்குள் திணித்

படிப்பகம்

www.padippakam.com



மனிதன் மதத்திலிருந்து விடுபட்டால், அவன் வாழ்க்கை இயல்பான, முறையான வாழ்க்கையாகிறது.

—சிக்மண்ட் ஃப்ராய்ட்

துப் புதியதொரு பிரபஞ்சத்தினை சிருஷ்டிக்கும் பிரயத்தனம் பிரெஞ்சு மொழியில் கவிஞர் அப்பொலினேர் தொடங்கி வைத்தது.

வெளிப்பாட்டுப் பாங்கியல் (Expressionism), 'ஆர்பிசம்' (Orphism), 'ஃபாவிசம்' (Fauvism) ஆகியன நவீன ஓவிய உத்திகள்.

இதில் 'ஆர்பிசம்' என்பது வேறொன்றுமில்லை. கல்லையும் யாழிசையால் கரைந்துருகச் செய்த 'ஆர்பியஸ்' (Orpheus) என்கிற புராண நாயகன் திருவிளையாடல் மகிமை. நம் நாட்டில் ஆயர்பாடிக் கண்ணன் குழலோசை மகத்துவம் போன்றது.

மேலும் இருபதாம் நூற்றாண்டு தொடக்கத்தில் மாத்திசா (Matisse) எனும் கலைஞன் உட்பட்ட ஓவியர் குழு ஒன்று இயங்கிற்று. ஃபாவே (Fauve) என்றழைக்கப்பட்ட, இயற்கையினை அதன் யதார்த்தத்துக்காக அலட்டிக் கொள்ளாமல் இரு பரிமாணங்களில் வண்ணக் குழைமங்களால் தீட்டும் முறையே ஃபாவிசம்!

புறவடிவத்தினை முழுதுமாகப் புறக்கணிக்காமல் ஒரு பொருளின் உண்மைத் தோற்றத்தை வெளிப்படுத்தும் பாங்கும், காண்பவர் கருத்தினைப் பாதிக்கச் செய்யும் பதிவும் (Impressionism) ஒருங்கிணைந்த 'கொல்லாஜ்' (Collage) எனும் நவீன முறை பற்றிக் கவிதைத் திறனாய்வர்கள் இன்று அதிகமாகவே எழுதுகிறார்கள்.

ஒன்றோடொன்று தொடர்பில்லாத பொருட்களை ஒருங்கிணைத்துப் புதியதொரு உருவத்தை வடிவமைப்பதே 'கொல்லாஜ்' முறை.

சான்றாக, தீப்பெட்டியின் உள்ளறையினை எடுத்து அதன்மேல் ஒரு சிகரெட் பெட்டி அட்டையை அரைவட்டத்தில் வளைத்துச் செருகி, சோடாச் சிப்பிக்குள்ளிருக்கும் கார்க் வட்டினைப் பிரித்தெடுத்து குச்சியினைச் செருகி ஒரு நூலால் கட்டி இழுத்தால் குட்டி வண்டி தயாராகிவிடுகிறது.

கவிதையிலும் வேற்றுமொழிச் சொற்கள், வாக்கியங்களைக் குழைத்து ஒருங்கிணைக்க முயலும் இம் முறையில்கூட புறவடிவத்திற்கே ஓர் பிரதானத்துவம் கிடைக்கிறது. அல்லது ஒரே மொழியினாலும் சம்பந்தமில்லாத வார்த்தைகளை இணைத்துக் கட்டும் இம்முறை கவிதையின் உள்ளுருவை அணுகுவதில்லை. ஏனெனில் தென்னந் தெரிசலான வார்த்தைகள்.

படிப்பகம்

www.padippakam.com



வழிபாடு என்பது கேட்பது அல்ல. அது ஆன்மாவின் வேட்கை. —காந்தி

கவிதா நிகழ்வு:—

ஆயின் இந்த ஒருங்கிணைவு முறையினை மௌன வாசிப்பு நிலைக்கும் கவியரங்கச் செவிப்பு நிலைக்கும் அன்றி மெய் அசைவுகளுடன் கூடிய நாடகீயத் தன்மைக்கு இட்டுச் செல்வதில் 'கவிதா நிகழ்வு' வெளிப்படுகின்றது. பாட்டுக் கூத்து போன்றதொரு கிராமீய வடிவம் இது.

அரங்கக்கலையாகப் புதுப்பரிமாணம் எடுக்கும் கவிதை வடிவங்களில் கேரள நாட்டுத் தெய்யம், களரிப்பயிற்று, படையணி, கூடியாட்டம், கர்னாடகத்தின் பயலாட்டா, தமிழகத்தின் கள்ளராட்டம், தேவராட்டம், ஒயிலாட்டம் தவிர மகாராட்டிரத்து 'தமாஷா', மேற்கு வங்க 'ஜாத்ரா' போன்றவையும் பிரசித்தமாம்.

ஆயினும் இவற்றை 'நவீன தியேட்டர்' உருவாக்கத்திற்காக ஒருப்படுத்தும் போது, அரங்கு, பேச்சுமுறை இவற்றின் வடிவச் செதுக்கல்தான் நிகழ்கின்றதே அல்லாமல் உள்ளடக்கம் பெரும்பாலும் அடிமை விடுதலை, பூர்ஷ்வா எதிர்ப்பு, போன்ற நடைமுறைக்குப் பழக்கமான உருவங்களையே ஒப்பனையின்றி, ஜோடனையின்றி வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது என்பது தெளிவு.

'நிகழ்கலை அனுபவமாகும் கவிதையின் இன்னொரு பரிமாணம்' என்று கவிதை கொலாஜ் நிகழ்வு வடிவாக்கி நடத்திவரும் வே மு. பொதியவெற்பனின் பரிசோதனை முயற்சி இதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

இத்தகைய கவிதா நிகழ்வு தாரர்களை 'கவிதை ஆசிரியர்கள்' (கவிதாசிரியர்கள்) எனலாம்.

தன்னுணர்ச்சிப் பாடற் புலவர்களிடமிருந்து கவிராயர், ஆழ்வார், நாயன்மார், கவிஞர் வசன கவிதை எழுத்தாளர், புதுக்கவிதையாளர், நவீன கவித்துவர், கவிதாசிரியர் வரை அவரவர் கைகளில் இலக்கிய வரலாற்றில் காலந்தோறும் மாறி நிகழ்ந்து வரும் கவிதை எனும் இலக்கியத் துறையின் கலை வடிவம் புற உருவமும் உள்ளடக்கமும் வேறுபடும் விசி



மதச் சடங்குகள் அவிசாரிப் போகக் காண்பதை விட, ஒரு நாடு அழிகிறது என்பதற்கான நிச்சயமான அறிகுறி வேறேதும் இல்லை.

— மாக்கியவல்லி

படிப்பகம்

www.padippakam.com



பாமர மக்களை அடக்கி வைக்க, மதம் மிக நல்ல சாதனம்தான்.

—நெப்போலியன்

தாச்சாரங்களில் கலந்து, உழன்று, தவழ்ந்து, எழுந்து, இழைந்தோடி வருகின்றது.

இந்தக் கடற்பரப்பில் ஒவ்வொரு அலை வீச்சும் அந்தந்தக் கால கட்டத்தின் கலைச் சுருளை மேலுயர்த்திக் காட்டுகின்றது. இவற்றில் பேதங் காண்பதும், புதிய புதிய அளவுகோல்களால் பழைய நிலைகளை 'மரபு' என அலட்சியமாய் ஒதுக்கித் தட்டி விடுவதும், துறைதோறும் படர்ந்த கிளைகளை மரங்களாக வியாக்கியானித்து விமரிசனம் செய்வதும், தாமே 'கவிதைத் துறை அதிகாரிகள் என்கிற மாதிரியான கெடுபிடி பந்தாக்களில் அலட்டிக்கொள்வதும், 'கலை' என்கிற தனிமனித உள்ளுணர்வு சார்ந்த படைப்பு, ரசிப்பு ஆகிய அகஞ்சார்ந்த அனுபவ நிலைக்கு உகந்ததல்ல.

இலக்கிய பரிணாம வளர்ச்சியில் உரைநடை, செய்யுள் நடைக்கு அப்பாலொரு தனி நடையாக 'கவிதை' பல்வேறு கூறுகளை, உத்திகளை, உருவங்களை விரித்து வியாபகம் செய்வதை நாம் கவனித்துக் குறித்து வைத்துக் கொள்ள வேண்டுமேயொழிய, குழுச்சண்டை அறிவார்ந்த மனித, இலக்கிய மேம்பாட்டிற்கு இழுக்காகும்.

ஏதாயினும், காலத்தின் பிம்பங்களைக் காட்டுமோர் பொதுஜனக் கலையாக கவிதை மலர்ந்து கொண்டே வரும் இப்பண்பினை அறிவியலில் 'பெருவெடிப்பு' (Big Bang) விளைவோடு ஒப்பிடலாம்! ○

## ஓர் இனிய அறிவிப்பு

இலக்கிய நண்பர்களே,

வரும் அக்டோபரில் நம் இதழுக்கு ஓராண்டு நிறைகிறது. கொண்டாடலாம் எனத் தோன்றுகிறது. குறை நிறைகளைப் படைப்பாய்வுக் கண்ணோட்டத்தோடு நீங்களும் எடை போடலாமே!

ஆகவே, அக்டோபர் இதழ் ஆண்டு மலராக, அதிகப் பக்கங்களோடு, புதிய அழகுகளோடு, கனமும் மணமும் கூடி வெளிவருகிறது.

—ஆசிரியர்.



படிப்பகம்

www.padippakam.com

# நாற்று

திடீரென்று கவனத்தைத் தாக்கும் மெய்ப்பாடுகள் மனிதனைப் பொறி தட்டிப்போக வைக்கின்றன. அது மாதிரியான சந்தர்ப்பங்களில் அவன் செயல் தர்க்கத்தைத் தொலைத்துவிட்டுத் தடுமாறிப் போகிறது. மனிதனின் சட்ட மீறல்கள் உற்பத்தியாவது இப்படித்தான்.

❖

கட்சி கட்டிக்கொண்டு ஒன்றை நிறுவ முற்படும் போது, நம் அன்புக்கும் நம்பிக்கைக்கும் உகந்த விஷயங்கள் கூடப் பகைச் சித்திரங்களாக மொத்தப் படுத்தப் படுகின்றன. சித்தாந்தங்கள் இவ்வாறுதான் தேர்ச் சக்கரங்களாகக் கட்டமைக்கப் படுகின்றன. அச் சக்கரங்களின் கீழ் தனிமனிதச் சிந்தனைகள் முரண்களாக நசுக்கப்படுகின்றன. நாளாவட்டத்தில் தேரோட்டிகளின் வுக்கிரங்கள் மகுடங்களாக முளைக்கின்றன. இந்தப் பிதுங்கல்களில், என்னதான் உயர்வாகச் சித்தரிக்கப்பட்டாலும், சித்தாந்தம் ஒரு ஜடம் தான் என்று ஆகிவிடுகிறது. மரணத்தைக்கூட மரியாதைப் படுத்தத் தெரியாத ஜடம். ஜடம் என்பது சடலம்தான் அல்லவா. கல்லறைக் கவிதைகூட இல்லாமல் புதையுண்டு போகும் சடலமாகிவிடுகிறது அது.

❖

கிடக்க முடிந்தால் இருக்க முயற்சி செய். இருக்க முடிந்தால் நிற்க முயன்று பார். நிற்க முடிந்தால் நடக்கவும், நடக்க முடிந்தால் ஓடவும் படிப்படியாக முயன்றால், வெற்றியும் படிப்படியாக உன்னை மேலேற்றும். ஓட முடியும்போது பறக்க முனையலாம்தான். ஆனால், உடலால் என்பதை விட உள்ளத்தால். விண்ணில் சுழலும் பறவையைப் பார். அதன் கண்ணும் கருத்தும் எப்போதும் மண்ணில்தான். ஆனால், மண்ணில் இயங்கும் மனிதனோ, தன் எண்ணம் முழுதையும் விண்ணில் ஏற்றலாம். எண்ணம் தான் ஏற்றம்! உடலில் சிறகு படைத்த பறவையை விடவும் நீ உயர்ந்தவனாய் இருக்கத்தான் உன் சிந்தனைக்குச் சிறகு முளைத்திருக்கிறது. எண்ணத்தை மேலேற்று. இந்த உடல் எப்போதும் மண்ணுக்கே.

படிப்பகம்

www.padippakam.com
Kavithaasaran, Aug. 1992. Regd. No. TN/MSN/746
CREATIVE LITERARY MONTHLY In TAMIL R. Dis. 5479/90

# ADVERTISEMENT TARIFF

| | |
|---|---|
| Back Cover (Black & White) | Rs. 1250/- |
| Cover inside I & II each | ,, 1000/- |
| Full Print Page | ,, 750/- |
| Half Page | ,, 400/- |

Add 50 % for each additional colour upto 3 colours.

## MECHANICAL DATA

| | |
|---|---|
| Overall Size of the Monthly: | 21.5 cm X 14 cm |
| Print Area | 17.5 cm X 10.5 cm |
| Printing Process: | Letter Press |
| Material preferred: | Matter to be composed & Blocks |

Your Advertisement in our Monthly is one step forward to help spread Creative Literature in good harmony.

சந்தாதாரர் ஆகுங்கள்
சந்தாதாரர் ஆக்குங்கள்

படிப்பகம்